தமிழ் எழுத்துச் சீரமைப்பு

டாக்டர் வா. செ. குழந்தைசாமி

தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
1979

விலை ரூ.

தமிழ் எழுத்துச் சீரமைப்பு

டாக்டர் வா. செ. குழந்தைசாமி

தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
1979

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

தமிழியல் துறை வெளியீடு : 23

முதற் பதிப்பு : சனவரி 1979

உரிமை : ஆசிரியர்க்கு

P31,3:9
L9

கிடைக்குமிடம் :

மதுரை காமராசர் பல்கலைக் கழக மத்திய கூட்டுறவு அங்காடி
பல்கலைநகர், மதுரை-625 021

அச்சிட்டோர் :

மதுரை காமராசர் பல்கலைக் கழக கூட்டுறவு அச்சகம்
பல்கலைநகர், மதுரை 625 021

உள்ளே

1.	பொது	1
2.	சீரமைப்பு முயற்சிகள்	2
3.	தமிழ் வரிவடிவம்	5
4.	மாற்றத்தின் கட்டாயம்	6
5.	இன்றைய வரிவடிவம்	12
6.	சீரமைப்பு	14
7.	இம்முறையின் குறிப்பிடத்தக்க கூறுபாடுகள்	25
8.	அணுகுமுறை	28
9.	எழுத்துச் சீரமைப்பு ஒரு மகத்தான சாதனை	28
10.	முடிவுரை	30
11.	சீரமைத்த வரிவடிவம்	34
12.	நூற்றொகை	37
	படம்—1	38
	படம்—2	40
	படம்—3	42
	படம்—4	44
	படம்—5	46
	படம்—6	47

தமிழ் எழுத்துச் சீரமைப்பு

1 பொது

தமிழ் நமது ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும், இந்த அறிவு யுகத்தில் (Knowledge era) நமது வாழ்விற்கும், வளத்திற்கும், நாளைய வளர்ச்சிக்கும் தேவையான அறிவுக் கருவூலங்களைத் தன்னுள் கொண்ட களஞ்சியமாகவும், விளங்க வேண்டுமென்பதே நமது நீங்கா ஆசை; நமது நெடுநாள் குறிக் கோள்.

''ஆழும் நெஞ்சகத்து ஆசை இன்றுள்ளதேல், அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்'' என்பது பாரதி வாக்கு. எனினும், ஆசைகளின் அடிப்படையில், முறையான முயற்சிகளும், திட்டமிட்ட செயல்களும் உருப்பெற்றால்தான், விளைவு உறுதிப்படும். எனவே தாய்த் தமிழில்,

.... இதுவரை
மலர்ந்த கலையினை, வாழ்வின் வெளியினில்
புலர்ந்த ஒளியினைப், பொருந்தும் வகையில்
எழுதவும், தமிழில் எண்ணவும், கருத்தின்
முழுமையும் தமிழ்வழி மொழியவும் வேண்டிய
மரபின் சொற்களும், வழக்கில் நிறைந்து
பரவிய குறிகளும் ....

மேலும் நமக்கின்றுள்ள தேவையின் விரிவும், செறிவும் தெரிந்து, தெளிந்து அவற்றை நிறைவேற்றும் பணியில் நாம் தொண்டு மனப்பான்மையுடனும். தொலை நோக்கோடும் ஈடுபடவேண்டும்.

வளர்ச்சி என்பது மாற்றம், மாற்றமில்லையேல் வளர்ச்சி இல்லை. இது இயற்கை விதி. சமுதாய வாழ்வின் எல்லாத் துறைகட்கும் பொருந்திய ஒன்று. இது மொழிக்கும் பொருந்தும். பழமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த தமிழ், சொல் வளமும், இலக்கிய வளமும் நிறைந்தது. எனினும், இன்றைய பல்வகை அறிவுத்

துறைகள், பெரும்பாலும் இனிமேல்தான் முறையாகத் தமிழில் வளர வேண்டும்.

தமிழ் இன்று ஒரு பண்பாட்டு மொழி; இலக்கிய மொழி; இந்த இரண்டு கூறுபாடுகளிலும் இணையில்லாதது. எனினும், இருபதாம் நூற்றுண்டில் நமது சமுதாயத்தின் தேவைகளைத் தீர்க்கும் கல்வி மொழியாக, அது இனிமேல்தான் உருவாக வேண்டும். அதை நாம் உருவாக்க வேண்டும்.

இந்த வளர்ச்சிப் பயணம் நீண்டது; பலபடிகளைக் கொண்டது. அவற்றில் முக்கியமான ஒன்று எழுத்துச் சீரமைப்பு. இதன் தேவை அரை நூற்றுண்டுக் காலமாகவே உணரப்பட்டு, அவ்வப்பொழுது வற்புறுத்தப்பட்டும் வந்திருக்கிறது; ஆனால் செயல் தேங்கி நிற்கிறது. இதுவரை நாம் கணிசமாக இத்துறையில் எதையும் செய்துவிடவில்லை.

2. சீரமைப்பு முயற்சிகள்

2.1 சீர்திருத்தம்பற்றிய சிறுவிளக்கம்.

எழுத்துச் சீர்திருத்தம்பற்றிப் பேசுமுன், இதன்மூலம் நாம் குறிப்பிடுவது என்ன என்பது பற்றித் தெளிவுபடுத்துவது தேவையெனப்படுகிறது. எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய விவாதம் எழும் போதெல்லாம், எழுத்துக்கள் குறைக்கப்படவேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்படுவதால், சிலர் இதன்மூலம் தமிழ்நெடுங்கணக்கிலிருந்து பல எழுத்துக்கள் அகற்றப்பட்டுவிடும்; தமிழ் நெடுங்கணக்கு 247 இலிருந்து 30-ஆகவோ, 40-ஆகவோ சுருங்கி விடும் என்று எண்ணி, இப்படி ஒரு மாற்றம் தேவைதானு? இதனுல் மொழிக்கு எதிர்காலத்தில், நாம் இன்று எதிர்பார்க்காத தீமைகள் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகின்றனர். எனவே, கீழ்க்கண்ட உண்மைகளை முன்கூட்டியே எடுத்துரைப்பது முக்கியமாகிறது:

- எழுத்துச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கம் ''தமிழ் நெடுங்கணக்கை''க் குறைப்பதல்ல.

- உயிர்மெய் ஆகாரத்தில் ஒன்ருகிய 'ஞ' என்ற எழுத்து 'னா' என்று எழுதப்படும்பொழுது, அதன் வடிவம் மாற்றப்படுகிறதே தவிர, எழுத்து விலக்கப்படுவதில்லை.

- 'ஞ' என்ற உயிர்மெய் ஆகாரத்தை 'ஞா' என்று எழுதுவதன் மூலம், தமிழ் நெடுங்கணக்கில் ஒரு எழுத்துக் குறைவதில்லை. ஆனால், தட்டச்சில் ஒரு எழுத்துக்கு வேண்டிய இடம் குறைகிறது. அச்சு அலுவலகத்தில் ஒரு எழுத்துக்கு வேண்டிய குழி குறைகிறது. கற்போர்க்கு ஒரு குறியீட்டை மனப்பாடம் செய்யவேண்டிய சுமை குறைகிறது. ஆனால் தமிழ் நெடுங் கணக்கின் எண்ணிக்கை அப்படியேதான் இருக்கிறது. எனவே எழுத்துக்குறைப்பு என்ற வழக்கு என்ன பொருளில் பயன்படுத்தப்படுகிறது என்பதை முதலில் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதுவரை பலராலும் பரிந்துரைக்கப்பட்ட முக்கியமான சீர்திருத்தங் களில், ஐகாரம், ஔகாரம் பற்றிய திருத்தங்கள் மட்டும் நெடுங் கணக்கைப் பாதிக்கக் கூடியவை. மற்ற எதுவும் நெடுங்கணக்கைப் பாதிப்பதில்லை.

தொல்காப்பியர் கூற்றுப்படி 'எழுத்து' என்ற சொல் ஒலியையும் குறிக்கும். வரிவடிவத்தையும் குறிக்கும். நமக்கு இன்று 247-ஒலி யெழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் இருக்கின்றன. இந்த ஒலி யெழுத்துக்களை வரிவடிவத்தில் எழுதும்போது, குறியீடுகளைப் பயன் படுத்த வேண்டும். இன்று நாம் 247 ஒலியெழுத்துக்கட்கு, 247 அடிப்படைக் குறியீடுகளைப் பயன்படுத்துவதில்லை. 131 குறியீடுகளை வைத்துக்கொண்டு, அவற்றைத் தனியாகவோ, அவற்றில் இரண்டு மூன்றைச் சேர்த்தோ பயன்படுத்தி, ஒலி எழுத்துக்களை வரிவடிவத்தில் எழுதுகிறோம். இப்பொழுது நாம் கூறுவதெல்லாம், தமிழ் நெடுங் கணக்கிலுள்ள 247 ஒலியெழுத்துக்களை வரிவடிவத்தில் எழுத, 131 குறியீடுகள் தேவையில்லை. மிகக் குறைந்த குறியீடுகளை வைத்துக் கொண்டே, *247* ஒலியெழுத்துக்களையும் வரிவடிவத்தில் எழுதலாம். இதன்மூலம், கற்பது எளிதாகும். அச்சுக் கோப்பதும், தட்டச்சுச் செய்வதும், தனியச்சு, வரியச்சு, தந்தி போன்ற சாதனங்களைப் பயன் படுத்துவதும் எளிதாகும். இதுவே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தின் அடிப்படை. இந்தக் குறிக்கோளை முன்வைத்தே இக்கருத்துரையில் வரும் வாதங்களையும், முடிவுகளையும் அணுகவேண்டும்.

2.2 *சீரமைப்பின் வரலாறு*

இன்றிருக்கும் தமிழ் வரிவடிவத்தை மாற்றியமைக்க வேண்டும்; எளிதாக்கவேண்டும் என்ற முயற்சி நேற்றுத் தோன்றியதல்ல. இந்த

நூற்றுண்டின் துவக்கத்திலிருந்தே அவ்வப்போது அறிஞர்கள், சமுதாயத் தலைவர்கள் குரல் கொடுத்து வந்திருக்கின்றனர்.

சென்னையில் 1934இல் நடந்த தமிழன்பர்கள் மகாநாட்டில் தமிழெழுத்துச் சீர்திருத்தம்பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைச் செயல்படுத்த ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. அந்த மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் பெரியார் அவர்கள் சில திருத்தங்களைத் தமது 'குடியரசு' நாளிதழில் புகுத்தினர்கள். அச் சீரமைப்புத் தொடர்ந்து அவரது நிறுவனங்களின் அளவில் மட்டும் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மீண்டும் 1941-இல் மதுரையில் நடந்த தமிழ் இலக்கிய மாநாட்டிலும் 1948-இல் சென்னையில் நடந்த அகிலத்தமிழர் மாநாட்டிலும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வழக்கம்போல் குழுக்களும் அமைக்கப்பட்டன. அவற்றினடிப்படையில் சுதேசமித்திரன் நாளிதழ் சில திருத்தங்களைப் பயன்படுத்தியது. ஆனல் இடையில் அதைக் கைவிட்டது. எனவே திருத்தங்கள் கருத்தளவில் நின்றன. பெரியாரவர்களின் வெளியீடுகளைத் தவிர வேறெங்கும் செயல்பெறவில்லை.

நமது நாடு விடுதலை பெற்றபின், மாநில அரசும் திரு. அவிஞசிலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் 1951ம் ஆண்டில் எழுத்துச் சீரமைப்புக்கு ஒரு குழு அமைத்தது. அந்தக்குழு, பேராசிரியர் தெ. பொ. மீ., பேராசிரியர் சேதுப்பிள்ளை, பேராசிரியர் சாமிநாதன், பேராசிரியர் மு. வ., திரு. சொக்கலிங்கம் போன்ற அறிஞர்களைக் கொண்டது. அவர்கள் பன்முறை கூடி, ஒரு பரிந்துரையை அரசுக்குப் படைத்தனர். அரசு அதைத் தள்ளவுமில்லை; கொள்ளவுமில்லை.

சில ஆண்டுகள் முன்பு நடந்த தமிழ்ப் புலவர்கள் மாநாட்டில் எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை மிகக் கவனமாக ஆராயப்பட்டு, கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு, சில வழிவகைகளும் பரிந்துரைக்கப்பட்டன. தமிழகத்தின் அறிஞர்கள், பல்வேறு சூழ்நிலைகளில் எழுத்துச் சீரமைப்பின் தேவையை வற்புறுத்தியிருக்கின்றனர். தொடர்ந்து வற்புறுத்தியும் வருகின்றனர்.

மேலே கூறியதுபோன்று, அரை நூற்றுண்டுக் காலமாகத் தீர்மானம் நிறைவேற்றவும், குழு அமைக்கவுமாகக் காலம் கழித்தோம். பெரியாரவர்கள் தமது இதழ்களில் புகுத்திய மாற்றங்களைத் தவிர நடைமுறையில் வேறு எதுவும் நிகழவில்லை. நமது

அண்டை மாநிலமான கேரளம், மலையாள வரிவடிவத்தில் பல மாற்றங்களைச் செய்து பயன்படுத்திவருகிறது. கன்னடம், தெலுங்கு இரண்டிற்கும் பொது வரிவடிவம் காணும் முயற்சி தீவிரம் அடைந்துள்ளது. தமிழ் வரிவடிவத்தில் சீர்திருத்தம் தேவையில்லை என்ற முடிவுக்கு நாம் வருவோமாயின் அது வேறு; ஆனால் தேவை என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செயல் தேங்கி நிற்கும் நிலை, நமது மொழி வளர்ச்சி முயற்சிகட்கு உயர்வு தருவதாயில்லை. தமிழ் வளர்ச்சிப் பணி பற்றிய பேச்சுக்களில் உண்மையும், நமது எண்ணங்களில் உறுதியும், செய்ய வேண்டுவது பற்றிய தெளிவும் இருக்குமாயின், எழுத்துச் சீரமைப்புப் பற்றிய பணியை நாம் உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

3. தமிழ் வரிவடிவம்

ஒரு மொழிக்கு ஒலிதான் அடிப்படை. வரிவடிவம் அந்த ஒலிகட்கு நாம் கொடுக்கும் குறியீடு. இந்தக் குறியீடுகள் எந்த மொழிக்கும் நிரந்தரமாக இருந்ததில்லை. அவை காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. வள்ளுவர் எழுதிய வரிவடிவத்தில் கம்பர் எழுதவில்லை. கம்பர் எழுதிய வரிவடிவத்தில் இன்று நாம் எழுதவில்லை. 19ஆம் நூற்றூண்டு வரை ஒவ்வொரு நூற்றூண்டிற்கும் இடையில் வரிவடிவத்தில் சில மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதனால் மொழிக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. மொழியின் அடிப்படைகளில் எந்த மாற்றமும் நிகழவில்லை; நிகழ ஏதுவில்லை.

வரிவடிவத்தில் அவ்வப்போது ஏற்படும் மாற்றம், பெரும்பாலும் எழுதப் பயன்படுத்தப்படும் பொருள்களை, எழுதும் முறையில் ஏற்படும் வளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. கற்களில், செப்பேடுகளில் ஓலைகளில் எழுதும் சூழ்நிலைகளில் வரிவடிவத்தில் சில கூறுபாடுகள் சாதகமானவையாக இருந்திருக்கலாம். அச்சுயந்திரம், அதற்குப்பின் தட்டச்சு, பின்னர் வரியச்சு (Linotype) தனியச்சு (Monotype) முதலிய பொறிகளும் தந்தி போன்ற சாதனங்களும் உருவாகி, கல்வி உலகில், எழுத்து, மொழி இவற்றின் பயன்பாட்டில், இவற்றைப் பயன்படுத்துவோர் தொகையில், நடைமுறை அளவிலும், தத்துவரீதியாகவும் புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்ந்தபின், அவற்றிற்கிணைந்த மாற்றங்கள், வளர்ச்சிக்கு இன்றியமையாத மாற்றங்கள் வரிவடிவத்தில் ஏற்படுவது தேவையான ஒன்று. தவிர்க்க முடியாத ஒன்று. தவிர்க்கக்கூடாததும்கூட.

கி. மு. 3-ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 19-ஆம் நூற்றுண்டு வரை தமிழ் வரிவடிவத்தில் உயிர் எழுத்துக்களிலும், மெய்யெழுத்துக் களிலும் ஏற்பட்ட மாறுதல்கள் கல்வெட்டுக்களின் ஆய்வினடிப்படையில் படம்-1* , படம்-2 * இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.(1) கல் லெழுத்துக்களில் ஏற்பட்டதுபோன்ற மாற்றங்கள் தொடர்ந்து ஏட்டெழுத்துக்களிலும் ஏற்பட்டிருக்கின்றன.

இன்று நாம் பயன்படுத்தும் வரிவடிவம், வீரமாமுனிவர் அவர்கள் செய்த சில திருத்தங்களைக் கொண்டது.

இருபதாம் நூற்றுண்டில், அறிவியல், தொழில் நுட்பத் துறை களில் மகத்தான புரட்சிகள் நிகழ்ந்தன. இவற்றின் விளைவுகளாக, உலக மொழிகளில் வரிவடிவம் சீரமைக்கப்பெற்ற மொழிகள் பல. மாற்றங்கள் தேவையென்பதற்கு, வெளிப்படையாகத் தெரியும் காரணங்கள் பல; சற்று ஆழமான அடிப்படைகளையுடைய காரணங்கள் சில. இவையனைத்தும், ஆயப்படவேண்டியன; மக்களால் அறியப்பட வேண்டியன.

4. மாற்றத்தின் கட்டாயம்

முன்பே கூறப்பட்டதுபோல, தமிழின் வரிவடிவத்தில் சில மாற்றங்கள் தேவையென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று என்றாலும் அதற்கான காரணங்களை இங்கு மீண்டும் வலியுறுத்துவது, இந்தக் கருத்துரையின் முழுமைக்குத் தேவையான ஒன்றாகும். அவை பின்வருமாறு.

- இன்று நமக்கு 12 உயிர் எழுத்துக்கள், ஒரு ஆய்தம், 18 மெய்யெழுத்துக்கள், 216 உயிர்மெய்யெழுத்துக்கள் ஆக 247 ஒலியெழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றின் ஒலிகட்கு. வரி வடிவத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் அல்லது அடிப் படை வடிவெழுத்துக்கள் 131.

- தமிழ் வரிவடிவத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் எண்ணிக்கையில் அதிகம். உருவில் சுழிகளும், வளைவுகளும், கொம்புகளுமாகச் சிக்கல் நிறைந்தது. ஒலிகளுக்கு ஏற்படுத்தப் பட்ட குறியீடுகளிலும், ஒரே முறை பயன்படுத்தப்படு வதில்லை.

---

* வெ. சுந்தரம்: கல் சொல்லும் கதைகள்

- மொழிக்கு ஒலிதான் அடிப்படை. வரிவடிவங்கள் ஒலிகட்கு நாம் கொடுக்கும் குறியீடுகள். இந்தக் குறியீடுகளை எளிதாக-வும் அமைக்கலாம். சிக்கல் நிறைந்ததாகவும் அமைக்கலாம். எளிய வடிவும், குறைந்த எண்ணிக்கையும் கொண்ட எழுத்து முறை, கற்பதற்கு எளிது. கால விரையத்தைத் தவிர்க்கக் கூடியது. கல்வி வளரத் துணை செய்யக்கூடியது.

- தமிழில் இன்று நாம் பயன்படுத்தும் 247 ஒலியெழுத்துக்கட்கு 131 வரிவடிவம் தேவையில்லை. சுமார் 30 குறியீடுகளில் 247 ஒலிகளையும் எழுத்து வடிவில் உருவாக்க முடியும். அவ்வளவு எளிமைக்கு இடமிருக்கும்பொழுது, நாம் அதைத் தவருது, தாமதிக்காது பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இருபதாம் நூற்ருண்டின் இறுதிப் பகுதியில், காற்று வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் உலகில் நாம் தலை-யெடுக்க, நமது இனமும், மொழியும் தழைக்க, இம்மாற்றங்-கட்கு நாம் சமைவாக இருக்க வேண்டும்.

- மனித சமுதாயத்தில் கல்வியையும், அறிவையும் பரப்புவதில் அச்சுயந்திரம் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. எழுத்தாணி கொண்டு ஓலையிலும், பின்னர் காகிதங்களிலும் எழுதுவதற்கு ஏற்றதாக இருந்த ஒரு வரிவடிவம், அச்சுக்கும் அப்படியே இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை.

- பழங்காலத்தில் கல்வியென்பது, எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வதும், பின்னர் சில இலக்கிய இலக்கண நூல்களைக் கற்பதும்தான் என்ற அளவிலேயே இருந்தது. அதாவது, கல்வியென்பதே ''மொழிக் கல்வி'' தான். ஆனல் இன்று மொழியைக் கற்பதே முடிவான குறிக்கோள் அல்ல. அது மற்ற அறிவுத் துறைகளைக் கற்பதற்கு முதல்படியாகும். எனவே, முன்புபோல, நாம் மொழியறிவு பெறுவதற்கு மட்டுமே நீண்ட காலத்தைச் செலவிட முடியாது. அப்படிச் செலவிடுவது, நமது மற்ற வளர்ச்சிகளைச் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ உறுதியாகப் பாதிக்கும்.

- பண்டைக் காலத்தில், கல்வி ஒரு சமுதாயத்தில் ஒரு சிலர், அதுவும் மிகச் சிலர் மட்டுமே பெறும் ஒன்ருக இருந்தது. அது தவிர்க்கமுடியாத தேவை என்ற நிலை அரசர்கட்குக் கூட

இருந்ததில்லை. உலகின் சாம்ராஜ்யங்கட்குத் தலைமை தாங்கிய பேரரசருள் அக்பர் புகழ்மிக்கவர். அரச தாரகைகளில் வெள்ளி மீனாக விளங்கியவர். அவர் ஒரு தற்குறி எழுதப்-படிக்கத் தெரியாதவர். அது அவருடைய பெருமைக்கு இழுக்காக அமையவில்லை. கல்வி பண்டைய சமுதாயத்தில் ஒரு பொருளாதாரத் தேவையாகவோ, சமுதாயத் தேவை-யாகவோ இருக்கவில்லை. ஆயிரத்திற்கு ஒருவர், இருவர் கற்ற சமுதாயத்தில் எழுத்துக்களைக் கற்கவும், எழுதவும் அதிகக் காலம் செலவழித்தால் சமுதாய அளவில் அதனால் ஏற்படும் நட்டம் கணிசமானதல்ல. ஆனால் அனைவரும் கல்வி கற்கவேண்டும் என்ற தத்துவம் (*Universal education*) செயல்படுத்தப்படும் இந்த நூற்றாண்டில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் எழுத்துக்களைக் கற்க அதிக நாட்கள், தலைமுறை தலைமுறையாகச் செலவிட நேர்ந்தால் அது மிகுந்த விரையமாகும். அது தவிர்க்கமுடியாதது என்றால் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் தவிர்க்க முடியுமெனின், அதைச் செய்யத் தயங்குவதற்கு நியாயமே இல்லை.

- மானிட வாழ்வு ஊனாலும் பொருளாலும் ஆனதல்ல. அது காலத்தால் ஆனது. காலத்தை விரையமாக்கும் இனம், விரையமாக்கும் வகையில் சில அமைப்புக்களை வளர்த்துக் கொள்ளும் இனம் வளர்ச்சிப் பயணத்தில் பின்தங்க நேரிடும்.

- இந்தியாவில், முதன் முதலாக நூல்கள் அச்சிடப்பட்டது தமிழில்தான் என்று கூறப்படுகிறது. அது தமிழகத்தில் நடைபெறவில்லை. கோவாவில் அச்சிடப்பட்டது. அன்று நூல்களை அச்சிட்ட கிருத்துவப் பாதிரிகள், கோவாவில் மராத்திய மொழியையோ, இந்தியையோ, கன்னடத்தையோ தேர்ந்-தெடுக்காமல், தமிழைத் தேர்ந்தெடுத்தற்குக் காரணம், தமிழ் மீது ஏற்பட்ட பற்று அல்ல. மற்ற இந்திய மொழிகளோடு ஒப்பிடும்போது தமிழ் வரிவடிவம் எளியது என்பதுதான். எளிமை எங்கிருப்பினும் அதில் ஒரு ஏற்றம் இருக்கிறது. அழகு இருக்கிறது. ஈர்ப்பு இருக்கிறது.

- இன்று நாம் தட்டச்சை (Typewriter) பெருமளவில் பயன்-படுத்துகிறோம். நமது சமுதாயம் வளர, வளர இவை

பெருகும். ஆனல் தட்டச்சில் நமது மொழியின் வேகம் ஆங்கிலத்தோடு ஒப்பிடத் தகுந்ததாக இல்லை. ஆங்கிலத்தில் மேல் நிலைத் தேர்வுக்கு வேகம் ஒரு நிமிடத்திற்கு 45 சொற்கள் (words)/225 தட்டுக்கள், (strokes)-அதே நிலைத் தேர்விற்குத் தமிழில் வேகம் 41 சொற்கள் (words) / 205 தட்டுக்கள். ஒரு மணி நேரத்தில் தமிழைவிட ஆங்கிலத்தில் 240 சொற்கள் அதிகம் தட்டச்சாகின்றன. தமிழ்த் தட்டச்சர் ஒவ்வொரு-வருடைய நேர மும் விரையமாகிறது. இது தொடர்ந்து அதிக அளவில் ஆகக்கூடிய கால விரையமாகும். ஒரு மனித சமு-தாயத்தில் ஈடு இணையில்லாத செல்வம் 'காலம்'. காலத்தை வீணக்கும், நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும்,கட்டிக்காக்கும் சமுதாயம் தனது கால்கட்குத்தானே தளை இட்டுக்கொள்கிறது.

- கையால் அச்சுக்கோக்கும் முறை மேலைநாடுகளில் இன்று பெரும்பாலும் மறைந்துவிட்டது. வரியச்சு (Linotype) முறை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. நமது நாட்டிலும் அது பழக்கத்திற்கு வந்துள்ளது. இன்று வரியச்சு முறையில் ரோமன் எழுத்துக்களைக்கொண்டு 50 சென்டிமீட்டர் அச்சுக் கோத்தால், தமிழ் எழுத்துக்களைக்கொண்டு 20 அல்லது 25 சென்டிமீட்டர்தான் அச்சுக் கோக்கமுடியும்(2).

இதுபற்றிப் புலவர் குழந்தை அவர்கள் கூற்றுப் பின்வருமாறு :

> " .. .. பன்னீருயிரும், ஒரு மெய்யோடு கூடியன 12 உயிர்மெய் எழுத்துக்களைச் சொல்லத் தெரிந்துகொண்டால், அப்படியே ஏனை உயிர்மெய்யெழுத்துக்களைச் சொல்லத் தெரிந்துகொள்ளலாம். ஆனல் 131 வடிவெழுத்துக்களையும் கற்றுக் கொள்வதற்கு இளங்குழந்தைகட்குப் பல மாதங்கள் ஆகின்றன .... தமிழ் எழுத்துப் பெட்டியில் அறைகள் மிகுதியாக உள்ளமையின் அச்சுக்கோத்துப் பழகவும் நாளாகிறது. அச்செழுத்துக்கள் வார்ப்பதும் கடுமையாக உள்ளது. தட்டெழுத்துப்பொறி செய்யக் கடுமையாக இருப்பதோடு விலை மிகுதியும் அச்சடித்துப் பழகக் காலமும் ஆகின்றன. அச்சடிப்பதும் எளிதாக இல்லை. இதனல் அரசியல், அலுவலகங்கள், தொழிலகங்கள், வணிகமனை முதலியவற்றில் தமிழ்மொழி தன்னிறைவு பெருமல் இருந்து வருகிறது''(3).

நமது தலையாய குறிக்கோள் தமிழ் நிலம் வளம் பெறவேண்டும்; தமிழினம் வளரவேண்டும் ; தமிழ் மொழி உயர்வு பெறவேண்டும் என்பதுதான். இதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. நாம் வாழும் இந்த அறிவுயுகத்தில் மேற்கண்ட குறிக்கோளையடைய :

- தமிழ் மக்கள் அனைவரும் கல்வி பெறவேண்டும். தற்குறிகள் இல்லாத தமிழ்ச் சமுதாயம் உருவாகவேண்டும்.

- படியாதவர்கள் இல்லாத தமிழ்நாடு பண்டைக்காலத்திலும் இருந்ததில்லை. இன்றும் இல்லை. அதை உருவாக்குவது மகத்தான சாதனை. இன்றுவரை தமிழ் மக்களின் வரலாறு காணாத சாதனை. அப்படிப்பட்ட மாற்றங்களை நாம் 'வர'மாகக் கேட்டுப்பெற முடியாது. வரலாறு காணாத சாதனைகளைப் படைக்க வரலாறு காணாத கருவிகளைப் படைத்தாக வேண்டும். 'கருவி' உடையார்க்கு 'அருவினை' என்பது இல்லை. கல்வி முயற்சியில் 'வரிவடிவம்' ஒரு முக்கியமான கருவி. கருவிகள் காலந்தோறும் மாறுபவை : வளர்பவை ; நமது வரிவடிவம் தேவைக்கேற்ப வளரவேண்டும். எனவே அது தேவையானல் மாறவும் வேண்டும். இந்த இடத்தில் பெரியாரவர்கள் 1948ல் கூறிய கீழ்க்கண்ட கருத்தினை நினைவுபடுத்துவது பொருத்தமாகும்.

  ''மாற்றுவதும், திருத்துவதும் யாருக்கும், எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ ஆகிவிடாது. மேன்மையடை-யவும் காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும் திருத்தவும் வேண்டும். பிடிவாதமாய்ப் பாட்டி காலத்திய, பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தால் அழிபட்டுப் போவோம். பின்தங்கிப் போவோம். மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க்-கருவியாகும். போர்க்கருவிகள் காலத்துக்கேற்ப மாற்றப்பட வேண்டும்''(4).

- இன்று 'படித்தவன்' என்பதற்கு இருக்கும் விளக்கம் 'எழுதப் படிக்கத் தெரிந்தவன்' என்பதுதான். மக்கள் கணக்-கெடுப்பிலும், இந்த அடிப்படையில்தான் எண்ணப்படுகிறது. 1971-ஆவது கணக்கெடுப்புப்படி தமிழகத்தில் தற்குறிகள் *100*க்கு *60* பேர். இன்று வளர்ந்த தமிழ் மகனை, தமிழ்

மகளைத் தற்குறியாக வைத்திருப்பது வரிவடிவம்தான். சுருக்கமாகச் சொன்னால் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்கட்கும் இடையே சாத்தப்பட்டிருக்கும் கதவு, வரிவடிவக் கதவுதான். இதை எளிதாகத் திறக்கும் வழியை நாம் காணவேண்டும்.

- வரிவடிவத்தை எளிதாக்குவதற்கு வழியே இல்லையென்றால், இருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டுவது தவிர்க்க முடியாதது தான். ஆனல் எளிதாக்க வழி இருக்கும்பொழுது, அந்த வழி நமது பண்டைய மரபுகட்கு மாறுபடாததாகவும் இருக்கும் பொழுது, அதை நாம் புறக்கணிப்பது, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது ஏதோ மொழிப் பாதுகாப்பு முயற்சி போலத் தோன்றினலும், அடிப்படையில், நீண்ட காலக் கணிப்பில், அது கலப்பில்லாத மொழி எதிர்ப்புக் கொள்கையும், இனவளர்ச்சித் தடைச் செயலுமாகும்.

- ''செய்தக்க வல்ல செயக்கெடும்: செய்தக்க
 செய்யாமை யானுங் கெடும்'' -என்ற குறள், மொழித் துறைக்கும் பொருந்தும். ''தமிழ் வரிவடிவம்'' நூற்றாண்டு தோறும் மாறியே வந்திருக்கிறது. இனி மாருது என்ற நிலை ஏற்பட்டுவிட்டதாக யாரும் அறுதியிட்டு விடவில்லை. இது வரை ஏற்பட்ட மாற்றங்களால் மொழிக்குத் தீமை விளையவில்லை. ஒலியை அடிப்படையாகக்கொண்டு, அதில் மாற்றமின்றி, அதற்காகப் பயன்படுத்தும் குறியீடுகளில் காலத்திற்கேற்பச் செய்யும் மாறுதல்கள் மிகச் சாதாரண நிகழ்ச்சியாகக் கருதப்படவேண்டுபவை. அதையே ஒரு சமுதாயம் மலையாகக் கருதுமானல் அதற்கு வயதாகிவிட்டது மட்டுமல்ல; வயோதிகமும் வந்துவிட்டது என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்.
 எனவே, *30* குறியீடுகளின் துணைகொண்டு மட்டுமே எழுதப்படும் எளிமைகொண்ட ஒரு மொழிக்கு, *131* குறியீடுகளைப் பயன்படுத்தி, கற்பதைச் சுமையாக்கி, பெரும்பான்மை மக்களிடையே தற்குறித்தனத்தைப் பாதுகாப்பதை எந்த அடிப்படையில் நாம் ஆதரிக்கமுடியும்?

பல்வகையிலும் தகுந்த காரணங்கள் இருந்ததால்தான், கடந்த 50 ஆண்டுகளாகவே இந்த மாற்றம் தேவை என்பது பலராலும், பல்வேறு சூழ்நிலைகளிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, இன்று நம் முன் இருக்கும் கேள்வி, எழுத்துச்

சீர்திருத்தம் தேவையா என்பதல்ல; அதை எப்படிச் செய்வது என்பதுதான். எனவே, தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் தேவை என்பதை அடிப்படையாக வைத்து, மேலே என்ன செய்யவேண்டும் என்பதை நாம் ஆராய்வது பொருத்தமாகும்.

எழுத்துச் சீர்திருத்தத்திற்கு இரண்டு வழிகளைப் பற்றி எண்ணலாம். அவையாவன :

1. இப்பொழுதிருக்கிற வரிவடிவத்தில் சில தேவையான மாற்றங்களைச் செய்வது.

2. புது வரிவடிவம் ஒன்றை, மாற்று வரிவடிவமாக ஏற்றுக் கொள்வது.

இந்தக் கட்டுரையில் இப்போதைய வரிவடிவத்தில் மாறுதல் செய்யக் கூடிய சாத்தியக் கூறுகளைப் பற்றி மட்டுமே ஆராய்வோம்.

5. இன்றைய வரிவடிவம்

தமிழிலுள்ள ஒலி எழுத்துக்கள் பின்வருமாறு :

1.	உயிரெழுத்துக்கள்	....	12
2.	மெய்யெழுத்துக்கள்	....	18
3.	உயிர் மெய்யெழுத்துக்கள்	....	216
4.	ஆய்த எழுத்து	....	1
	மொத்தம்	....	247

இந்த 247 ஒலியெழுத்துக்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் வடிவெழுத்துக்கள் பின்வருமாறு :

1.	உயிரெழுத்துக்கள்	(அ........ ஒ)	11
2.	மெய்யெழுத்துக்கள்	(க்.........ன்)	18
3.	அகர உயிர்மெய்	(க .... ன)	18
4.	இகர உயிர்மெய்	(கி...... .....னி)	18
5.	ஈகார உயிர்மெய்	(கீ.. ...... னீ)	18

6.	உகர உயிர்மெய்	(கு.............னு)	18
7.	ஊகார உயிர்மெய்	(கூ.......... னூ)	18
8.	ணா, ரு, னா, ணை, லை, ளை, னை	....	7
9.	குறிகள் ா, ெ, ே, ை	....	4
10.	ஆய்தம்	....	1
			131

இன்று தமிழை எழுதவும் படிக்கவும் விரும்புவோர், இந்த 131 குறியீடுகளையும் முதலில் மனப்பாடம் செய்யவேண்டும்.

பொதுவாக தமிழ் வரிவடிவத்தில் மூன்று சிக்கல்கள் குறிப்பிடப்பட வேண்டியன. அவை பின்வருமாறு :

1. வரிவடிவங்களின் எண்ணிக்கை அதிகம் (ஆங்கிலத்திற்குப் பயன் படுத்தப்படும் ரோமன் வரிவடிவத்தில் இத்தனை எழுத்துக்கள் இல்லை)

2. வரிவடிவத்தில் சீர்மையும் (Uniformity) பொதுமையும் குறைவு (சான்று : உயிர்மெய் ஆகாரத்தில் கா, ணா ஆகிய வழக்கும்; உயிர்மெய் ஐகாரத்தில் கை, னை ஆகிய வழக்கும்; உயிர்மெய் ஆகாரமான கா, ஙா, ... இவற்றில் கால் எழுத்துக்கு வலப்பக்கத்திலும், உயிர்மெய் எகரம், ஏகாரத்தின் கொம்புகள் கெ, ஙெ .... கே, ஙே .... போல எழுத்துக்கு இடப் பக்கத்திலும், ஒகரம், ஓகாரத்தில் அவை கொ, ஙொ ... கோ, ஙோ .... போல இருபக்கங்களிலும் வருகின்ற வழக்கும், உயிர்மெய் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகியவற்றில் எந்தப் பொதுவிதியும் இன்மையும் ஆகும்)

3. வரிவடிவம், சுழிகளும், கொம்புகளுமாகச் சேர்ந்து, எழுதுவதற்குச் சிக்கலானது. (ரோமன் வரிவடிவம் போன்று எழுதுவதற்கு எளிதான அமைப்பு இல்லை)

மேலே கூறப்பட்டுள்ள மூன்று கூறுபாடுகளும் :

1. கற்பதைச் சிரமமாக்குகின்றன.

2. காலவிரையத்திற்குக் காரணமாகின்றன.

3. 'தற்குறித்தன்மை' நிலைபெறத் துணைநிற்கின்றன.

4. வாழ்வின் பல துறைகளில் தட்டச்சுமூலம், அச்சுமூலம், தந்தி மூலம் தமிழ் மொழி பயன்படுத்தப்படுவதற்குத் தடையாக நிற்கின்றன.

நமது வரிவடிவத்திலிருக்கும் இக்குறைபாடுகளை முடிந்தவரை அகற்றுவதன் மூலம் மொழிக்குத் தீமையோ, அல்லது அகற்ருது நிலைநிறுத்துவதன்மூலம் நன்மையோ இல்லை. எனவே வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்களைச் செய்வதே, முன்னேறும் ஒரு சமுதாயத்தின் கடமையாகும்.

6. சீரமைப்பு

6.1. பெரியார் திருத்தம்.

தமிழ் எழுத்துச் சீரமைப்பின் முதற்கட்டத்தைப் பெரியார் அவர்கள் 1934 - ஆவது ஆண்டிலேயே புகுத்தினுர்கள். அவர்கள் பயன்படுத்திய மாற்றம் பின்வருமாறு :

ஐ	...	அய்	ளை	...	ளை
ஔ	....	அவ்	னை	....	னை
ணா	....	ணா	ணொ	....	ணொ
றா	...	றா	றொ	....	றொ
னா	....	னா	னொ	....	னொ
ணை	....	ணை	ணோ	....	ணோ
லை	....	லை	னோ	....	னோ
			றோ	....	றோ

விடுதலை, மற்றும் பெரியாரவர்கள்தம் வெளியீடுகள் மட்டுமே கிட்டத்தட்ட அரை நூற்ருண்டாகப் பயன்படுத்திவந்த இந்த மாற்றத்தை, இன்றையத் தமிழக அரசு அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டது. கடந்த இருநூற்ருண்டுத் தமிழ் வளர்ச்சியில் இது போற்றத் தக்க கட்டமாகும்.

இந்த மாற்றத்தின் மூலம் வரிவடிவத்தில் எட்டு எழுத்துக்கள் குறைகின்றன. அவை ணா, றா, னா, ணை, லை, ளை, னை, ஐ

ஆகியவை ஆகும். வரிவடிவம் 131 - லிருந்து 123 ஆகிறது. இதனுல் ஏற்படும் மாறுதல் எழுத்துச் சிக்கனம், எழுதுவதில், அச்சில் விரைவு என்பதைவிட, 'சீர்மை' 'பொதுமை' புகுத்தப்படுகிறது என்பதாகும். இதன்மூலம் வரிவடிவத்தில் சீர்மை அதிகரிக்கிறது. கற்பவர்கள் எட்டு வரிவடிவத்தை மனப்பாடம் செய்யும் சுமை குறைகிறது. இந்தக் கண்ணேட்டத்தில்தான் பெரியார் அவர்கள் செய்த மாற்றத்தை நாம் அணுகவேண்டும்.

பெரியாரவர்கள் செய்த சீர்திருத்தத்தை நாம் ஏற்றுக்கொள்வோமானல், அதன் விளைவாக, விடுதலையில் பெரியார் அவர்கள் பயன்படுத்தியதைவிடப் பின்வரும் அதிகமான மாறுதலை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுவது தவிர்க்க முடியாததாகிறது:

1. பெரியார் ஐ, ஔ இரண்டையும் தனி எழுத்துக்களாகக் கருதாது, கூட்டெழுத்துக்களாகக் கருதி, அய், அவ் என்று எழுதினுர். இதன் விளைவாக உயிர்மெய் ஐகாரமும், உயிர்மெய் ஔகாரமும் கூட்டெழுத்துக்களாகவே எழுதப்படவேண்டும்.

2. 'ஐ' காரத்தை 'அய்' என்று எழுதியபின், உயிர்மெய் ஐகாரங்களான கை, சை, ஙை, டை, ணை முதலியவை கய், சய், ஙய், ஞய், டய், ணய் என்றே எழுதப்படவேண்டும். அதுபோலவே உயிர்மெய் 'ஔ' காரம், கவ், சவ், ஙவ், ஞவ், டவ், ணவ் என்றே எழுதப்படவேண்டும். எனவே முறையாகப் பார்த்தால் பெரியார் அவர்களின் சீர்திருத்தத்தை முறையாகக் கொண்ட தமிழ் வரிவடிவம் பின்வருமாறு அமையும்.

உயிர்எழுத்துக்களும் ஆய்தமும் :

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ	ஐ	ஔ	ஃ
அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ	அய்	அவ்	ஃ

மெய், உயிர்மெய் எழுத்துக்கள்

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கொ	கோ	கை	கௌ	க்
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கொ	கோ	கய்	கவ்	க்
.	. .	.	.	.	.	. .	. .	. . .	. . .	. .	. .	.
.	. .	.	.	.	.	. .	. .	. . .	. . .	. .	. .	.
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னொ	னோ	னய்	னவ்	ன்

மேலே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் உயிர்எழுத்து ஐகாரம் ஔகாரம் ஆகியனவும், உயிர்மெய் ஐகாரம், ஔகாரம் ஆகியனவும் இடம்பெற்றிருக்கின்றன. இச்சீரமைப்பின்படி இவை கூட்டெழுததுக்களானமையின் நெடுங்கணக்கிலிருந்து விடுபட்டுவிடும்.

6.2 குறைந்த பட்சத்திருத்தம்

பெரியார் அவர்கள் செய்த மாற்றம் சிறப்புடையது. வரலாற்றுப் புகழுடையது. எனினும், பெரியார் அவர்கள் 30.12.1934இல் 'பகுத்தறிவு' இதழில் எழுதியதை நினைவுக்குக் கொண்டு வருவது நலம் பயக்கும். எழுத்துச் சீர்திருத்தத்தைக் குடியரசுப் பதிப்பில் புகுத்தும் பொழுது, பெரியார் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் :

> '' இன்னமும் தமிழ் பாஷை எழுத்துக்களில் அநேக மாறுதல்கள் செய்யவேண்டி இருந்தாலும், இப்-போதைக்கு இந்தச் சிறு மாறுதலை அனுபவத்-திற்குக் கொண்டு வரலாம் என்று கருதி, அந்தப்-படியாகவே எழுத்துக்களை உபயோகித்து, அடுத்தாற்போல பிரசுரிக்கப்போகும் 'குடியரசு' பத்திரிகையைப் பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்''.
>
> --பெரியார் : பகுத்தறிவு, 30.12.1934

ஏறத்தாழ அரை நூற்றுண்டுக்கு முன்பே, தேவையென்று கருதப்-பட்ட மற்ற மாறுதல்கள் பற்றி, இப்பொழுது சிந்திக்கவேண்டியது கடமையாகிறது. எனவே, எழுத்துச் சீரமைப்பின் அடுத்த கட்டம் பற்றி நாம் சிந்திப்பதும் செயல்படுவதும் இன்றியமையாத தேவையாகும்.

6.2.1. உயிர் எழுத்துக்கள்

தமிழில் உயிர் எழுத்துக்கள் 12 என்ருலும், ''அ, இ, உ, எ, ஒ'' என்ற ஐந்து குற்றெழுத்துக்களே அடிப்படை ஒலி எழுத்துக்களாகும். ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகியன இவற்றின் நீண்ட ஒலிகளாகும். ஐ, ஔ இரண்டும் ஈருயிரொலிகள். அகரமும், இகரமும் சேர்ந்து ஐகாரமாகிறது ; அகரமும் உகரமும் சேர்ந்து ஔகாரமாகிறது* . உயிர் மெய்யெழுத்துக்களின் நெடிலுக்குப் பயன்படுத்தப்படும் காலான 'ா' என்ற குறியையே, உயிர் எழுத்துக்களின் நெடிலுக்கும் பயன்படுத்தலாம். எனவே, உயிர் எழுத்துக்களைக் கீழ்க்கண்டவாறு எழுதலாம்:

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ	ஐ	ஔ
அ	அா	இ	இா	உ	உா	எ	எா	ஒ	ஒா	அய்	அவ்

இதன்மூலம் உயிரெழுத்துக்கட்கு, 11 வரிவடிவத்திற்குப் பதிலாக 5 வரிவடிவம் போதுமானதாகிறது. இவற்றில் அய், அவ் என்பன பெரியார் அவர்கள் வழக்கத்திற்குக் கொண்டு வந்தவையாகும். அவை நெடுங்கணக்கில் இடம் பெரு. குற்றெழுத்துக்கள் ஐந்திற்கும் 'ா' என்ற காலைப் பயன்படுத்துவதன்மூலம் நெட்டெழுத்துக்களாக்கலாம் என்ற கருத்தை பெரியார் 1948 - இல் கூறியிருக்கிருர்கள். (4) எகரமும், ஒகரமும் புள்ளி சேர்ந்தால் குறிலாகவும், புள்ளியில்லாவிட்டால் நெடிலாகவும் பயன்பட்டு வந்தது என்ற கருத்தை,

> ''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் : 'எ' கர
> 'ஒ' கரத்தியற்கையும் அற்றே''

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை எழுதியவர்கள் கூறியுள்ளார்கள். ''தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்'' என்ற வெளியீட்டில் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி கீழ்க்கண்ட தகவல்களைத் தருகிருர்:

> ''உயிர் உகரம், ஊகாரம் எழுத்துக்களை எடுத்துக்
> கொண்டால், வேள்விக் குடிச் செப்பேட்டில்,
> தற்கால 'ஊ' காரத்தின் வடிவம் காணப்பட-

* மொழியியலாளரிடையே இதில் கருத்து வேறுபாடு உண்டு.

வில்லை அதற்குப் பதிலாக உகரத்துடன் ஒருகால் வாங்கப்பட்டு, ஊகாரமாக வாசிக்கப்படுறது.'' (2)

''எகரம், ஏகார உயிர்எழுத்துக்கள் தற்கால வரி-வடிவில் இருப்பதுபோல் அல்லாமல், குறிலைக்-குறிக்க உட்புள்ளி இடப்பட்டது. நெடிலைக் குறிக்க உட்புள்ளி இடப்படுவது இல்லை .... ஒகர, ஓகார எழுத்துக்களிலும் இதே போல் வேறுபாடு காணப்-படுகிறது .... இந்த மாதிரி உட்புள்ளி அமைப்பு பழைய ஓலைச் சுவடிகளில் இருந்தன என்று நன்னூல் வெளியீட்டு முகவுரையில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் 1918 - இல் குறிப்பிட்டுள்ளார். 1839-ஆம் ஆண்டில் திரு. தாண்டவராய முதலியார் வெளியிட்ட சேந்தன் திவாகரம் புத்தகத்தில் உயிர்க்குறிலான எகர, ஒகரங்களில் புள்ளி வைத்திருப்பதாகத் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் திரு. மு. அருணசலம் கூறியுள்ளார். இப்பொழுது வழக்-கத்திலிருக்கும், ஏகாரம், ஓகார வடிவமைப்பு வீரமாமுனிவர் என்ற பெஸ்கி பாதிரியாரால் கொண்டுவரப்பட்டது. இத்தகவலை டாக்டர் உல்ஷ் 1890 - இல் வெளியான தென்னிந்திய சாசனங்கள் முதற்பதிப்பு முன்னுரையில் கூறியுள்-ளார்கள்''.(2)

ஏகார நெடிலுக்குக் கீழ்க்கோடிடும் முறை வீரமாமுனிவர் காலத்திற்கு முன்பிருந்தே இருந்தது என்பது பேராசிரியர் மு. இராகவையங்கார் முதலியோர் கருத்து. எப்படியிருப்பினும், உயிர்க்-குற்றெழுத்துக்கட்கு, ஒரு குறியீட்டைச் சேர்ப்பதன்மூலம் அல்லது குறைப்பதன்மூலம் உயிர் நெட்டெழுத்துக்களை உருவாக்கும் பழக்கம் தொன்றுதொட்டே இருந்து வந்திருக்கிறது என்பதும், சீராக 'ா' என்ற காலைப்பயன்படுத்தி ஐந்து நெட்டுயிர் ஒலிகளை அமைப்பது பழைய மரபுக்கும், வழக்குக்கும் ஒன்றிய திருத்தமே என்பதும் பெறப்-படும். மாற்றங்கள் பழைய மரபொடு ஒன்றித்தான் இருக்க வேண்டு-மென்பது தவிர்க்கமுடியாத தேவையன்று. ஆனால் ஒரு திருத்தம் இன்றையத் தேவையையும் நிறைவேற்றி, பண்டைய மரபையும் காப்பாற்றுமானல் ஏற்பதற்கு எளிதாகிறது.

6.2.2. மெய்யெழுத்துக்கள்

மெய்யெழுத்துக்கள், அகர உயிர்மெய்க்குத் தலையில் புள்ளி-யிடுவதன் மூலம் பெறப்படுகின்றன. இதனால் 18 எழுத்துக்கள் வரிவடிவத்தில் கூடுகின்றன. தட்டச்சில் கிட்டத்தட்ட மூன்று எழுத்துக்களை அடிக்கும் காலம் ஒவ்வொரு மெய்யெழுத்துக்கும் தேவைப்படுகிறது.

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'' என்பது தொல்காப்பியம். இதில் புள்ளியைப்பற்றி ஆசிரியர் பேசுகிறார் என்றாலும், அப்புள்ளி, எழுத்தின் மேலே எழுதப்பட்டதா என்பது-பற்றி அவர் குறிப்பிடவில்லை. மெய்யெழுத்துக்கள் புள்ளி-யுடனும், புள்ளியில்லாமலும் பண்டைக்காலத்தில் பயன்படுத்தப்-பட்டிருக்கின்றன. வேள்விக்குடிச் செப்பேட்டில், மெய்யெழுத்திற்குப் புள்ளி எழுத்தின் வலதுபுறத்தில் மேற்பகுதியில் இடப்பட்டிருப்-பதாகக் கூறப்படுகிறது. பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் (4) '' .... புள்ளியை, பூச்சியம் போன்ற சுழியாக, க .... முதலிய-வற்றினை அடுத்து உயர நிற்கவே அமைப்போமானால் க ... முதலிய பதினெட்டோடு இந்தச் சுழி ஒன்றே போதும்'', என்று கூறு-கிறார். வலது பக்கத்தில் இரு சிறு சுழிகளை இடுவதுசிறப்பாக அமை-யும். ஆனால் அது தேவநாகரியிலிருந்து பெறப்பட்டதெனச் சிலர் புறக்-கணிக்கக்கூடும். எனவே, எழுத்துக்கு வலதுபுறம், சற்று மேலாக ஒரு சிறு சுழியை மெய்யெழுத்துக்கட்குப் பயன்படுத்தலாம். இச்-சீரமைப்பின்படி மெய்யெழுத்துக்கள் கீழ்க்கண்டவாறு அமையும்: *

க்	—	க°
ங்	—	ங°
ச்	—	ச°
.		°
.		°
.		°
ன்	—	ன°

6.2.3. உயிர் மெய்யெழுத்துக்கள்

உயிர் எழுத்தும், மெய்யெழுத்தும் சேர்ந்து உருவாவது உயிர் மெய்யெழுத்து. உயிர் மெய்யெழுத்துக்கள் உயிரும், மெய்யும்

* மெய்யெழுத்தினைக் குறிக்கப் பயன்படுத்தியிருக்கும் ''சிறு சுழி'', எழுத்தின் உயரத்திற்குள் அமையவேண்டும். தட்ப, வெட்ப நிலையைக் காட்டும் 'டிகிரி' என்பதற்காகப் பயன்படுத்தும் சிறுசுழியையே, தற்காலிகமாக இங்கும் கையாண்டிருப்பதால், அது சற்று மேலே அமைந்திருக்கிறது.

சேர்ந்து எழுவன ஆயினும், தனித்தன்மை உடையவை. ஆங்கிலத்தில் உயிர்மெய் ஒலிகள் உண்டு. ஆனல் உயிர் மெய் எழுத்துக்கள் தனியே இல்லை. தமிழில் உயிர் மெய் எழுத்துக்கள் என்ற ஒருவகை வரிவடிவத்தில் இடம் பெற்றுள்ளது. உயிர்மெய் எழுத்து என்பது அனைத்து இந்தியமொழிகளின் வரிவடிவத்திற்கும் பொது; எனவே அதை நாம் தொடர்ந்து காப்பது தேவையென்றே கொள்ளலாம். உயிர்மெய் எழுத்துக்களில், வரிவடிவத்தின் அடிப்படை எண்ணிக்கையை மிகுதிப்படுத்துவன, உயிர்மெய் இகரம், உயிர்மெய் ஈகாரம், உயிர்மெய்உகரம், உயிர்மெய் ஊகாரம் ஆகும். மற்ற உயிர்மெய் எழுத்துக்கள் அகர உயிர்மெய்க்கு முன்னும், பின்னும் பொதுவான குறியீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக, இந்த நான்கு வகையின மட்டும், தனித்தனி எழுத்துக்கள் தேவைப்படுவனவாக உள்ளன. அதனல் இவற்றிற்கு மட்டும் 72 வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன. மற்ற உயிர்மெய் எழுத்துக்கள் போன்றே பொதுவான குறியீடுகளைப் பயன்படுத்தி உயிர்மெய் இகரம், உயிர்மெய் ஈகாரம், உயிர்மெய் உகரம், உயிர்மெய் ஊகாரம் ஆகிய உயிர் மெய் எழுத்துக்களை எழுதுவதன்மூலம் 68 வரிவடிவங்களைக் குறைக்கலாம். இகரக்குறியாக I போன்ற செங்குத்துக் கோட்டையும் அதன் நெடிலாக İ என்ற குறியையும் உகரக்குறியீடாக ¬ போன்ற குறியையும் அதன் நெடிலாக ¬̇ என்ற குறியையும் பயன்படுத்தலாம்.

கி — கI

கீ — கİ

கு — க¬

கூ — க¬̇

இந்த மாறுதல்களோடு தமிழ் வரிவடிவம் பின்வருமாறு அமையும்:

ஆய்தம், உயிர் எழுத்துக்கள்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ	ஐ	ஔ	ஃ
அ	அா	இ	இா	உ	உா	எ	எா	ஒ	ஒா	அய°	அவ°	ஃ

மெய், உயிர் மெய் எழுத்துக்கள்

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கொ	கோ	கை	கௌ	க்
க	கா	கI	கI	க¬	க¬	கெ	கே	கொ	கோ	கய°	கவ°	க°
ன	னா	னI	னI	ன¬	ன¬	னெ	னே	னொ	னோ	னய°	னவ°	ன°

மேற்கண்ட மாற்றங்களைப் பயன்படுத்துவதன் மூலம், தமிழ் வரி வடிவத்தின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அமையும்:

அடிப்படை உயிர் எழுத்துக்கள்	....	5
அகர உயிர்மெய் எழுத்துக்கள்	....	18
உயிர்க்குறியீடுகள்	....	7
மெய்க்குறி	....	1
ஆய்தம்	...	1
மொத்தம்	....	32

தமிழில் அடிப்படை உயிரொலிகள் ஐந்தே. எனவே உயிர் எழுத்துக்களை ஐந்து குற்றுயிர்களின் அடிப்படையில் முன்பு கூறியவாறு அமைப்பது பொருத்தமானதே. இருப்பினும், உணர்வுகள் காரணமாக, ஐகாரமும், ஔகாரமும் தனித்தனியே எழுதப்படவேண்டும் என்று கொண்டால்கூட மொத்த வடிவெழுத்துக்கள் 34 ஆகும். இந்த 34ஐவிட அதிகமான வரிவடிவத்தை இப்பொழுதிருக்கும் தமிழ் ஒலி எழுத்துக் கட்குப் பயன்படுத்துவதற்கு, மொழியியல் அடிப்படையிலோ, பகுத்தறிவு அடிப்படையிலோ, எந்தவிதமான காரணமும் இல்லை. தொடர்ந்து 131 வரிவடிவங்களை நாம் பயன்படுத்துவோமானால் அது உண்மையிலேயே கல்வியைச் சுமையாக்கும், ''மக்கள் விரோத''ச் செயலாகும். வளர்ச்சித் தடை அணுகுமுறையாகும். மேற்கண்ட முறைப்படி, ஐகாரத்தையும் ஔகாரத்தையும் தனி எழுத்துக்களாகவே ஏற்று அமைக்கப்பட்ட தமிழ் நெடுங்கணக்கு படம் 3-இல் தரப்பட்டிருக்கிறது.

இச்சீரமைப்பின்படி மனப்பாடம் செய்ய வேண்டிய குறியீடுகள் 34. அவை பின்வருமாறு:

அ, இ, உ, எ, ஒ. ஐ, ஃ
க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ ள, ற, ன.
ா, ி, ீ, ு, ூ, ெ, ே, ை, ்

6.3 முழுமையான சீரமைப்பு

மேலே கூறப்பட்ட சீரமைப்பின் மூலம் வரிவடிவச் சிக்கனத்தையும், ஓரளவு வரிவடிவத்தில் சீர்மையையும் (Uniformity) ஏற்படுத்தியிருக்கிறோம் என்றாலும், இன்னும் சற்று அதிகமான ஒருமைப்பாட்டைக் கொணர்வது இயன்றதொன்றே. அதாவது 1934-இல் பெரியார் அவர்கள் குறுகிய அளவில் கையாண்ட அடிப்படைக் கோட்பாடுகளை, தமிழ் வரிவடிவம் முழுமைக்கும் பயன்படுத்துவது, அவர் தொடங்கிய பணியின் தொடர்ச்சியாகும். ஆனால் அதற்கேற்ற மாற்றத் திற்குத் தமிழுலகம் சமைவாயிருக்கிறதா என்பது எண்ணவேண்டிய ஒன்று. எனினும் கீழ்க்கண்ட வகையில் வரிவடிவத்தை அமைப்பது முழுமைபெற்ற சீரமைப்பாகும்.

இப்பொழுதிருக்கும் வரிவடிவத்திலுள்ள எழுத்துக்களை வைத்துக் கொண்டு, தேவையான மாறுதல்கள் செய்வது என்ற முடிவுக்கு வந்த பின், அதிலும் அரைக்கிணறு தாண்டாமல், எவ்வளவு தூரம் வடிவெழுத்துக்களைக் குறைக்கமுடியுமோ, எவ்வளவு தூரம் பொதுமையை, சீர்மையைப் புகுத்தமுடியுமோ, அந்த அளவிற்கு அதை முழுமையாகச் செய்ய நாம் சமைவாகவேண்டும். எனவே மேலும் செய்யப்படக் கூடிய மாற்றங்கள் பற்றி ஆராய்வோம்.

பொதுவாக எந்தத்துறையிலும், சில அடிப்படை விதிகள் வரையறுக்கப்பட்டு; அவற்றினடிப்படையில் செய்முறை அமையுமானால், பயில்வதும், பயன்படுத்துவதும் எளிதாகும். அறிவியல் அணுகுமுறையின் அடிப்படையே இதுவாகும். தமிழ் வரிவடிவ அமைப்பில், குறிப்பாக உயிர்மெய் எழுத்துக்களை உருவாக்குவதில், ஒரு சீரான முறையைப் பயன்படுத்துவது சாத்தியமாகும். ஆனால் நடைமுறையில்

நாம் அவ்வாறு செய்யவில்லை. பேராசிரியர் மு. வ. கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''இன்னுமொரு குறையும் களைய வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது: மெய் வடிவிற்குப் பிறகு உயிர்க்குறியீடு அமைவதே உலக மொழிகள் எல்லாவற்றிலும் உள்ளது, வட இந்திய மொழிகளிலும் உள்ளது. கன்னடம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகளிலும் உள்ளது. ஆனால் இதற்கு மாறான - பொருத்தமும் இல்லாத - ஒருமுறை எவ்வாறோ தமிழில் புகுந்துள்ளது.

கெ, ஙெ, செ, ஞெ, டெ, ணெ ....

கே, ஙே, சே, ஞே, டே, ணே .. ..

முதலியவற்றில் மெய்க்குப் பின் வரவேண்டிய உயிர்க்குறியீடு மெய்க்கு முன் வருகிறது.

கொ, ஙொ, சொ, ஞொ, டொ, ...

கோ, ஙோ, சோ, ஞோ, டோ, ...

முதலியவற்றில் உயிர்க்குறியீடு மெய்க்கு முன்னும், பின்னுமாகிய இரண்டிடத்திலும் வருகிறது. இந்தக் குறையைக் களைதல் கடமை என்று செயலில் முற்படுவதற்குக் காலம் ஆகலாம். பிறகு கருதுவோம் என்று இது ஒத்திவைக்கப்படலாம். ஆனால் இது குறை என்று இன்றே உணர்தல் அறிஞர் கடமையாகும்''.(4)

டாக்டர் மு. வ. நிதானப்போக்கை நெறியாகக் கொண்டவர். பழமையனைத்தையும் பற்றுபவருமல்ல. புதுமையனைத்தையும் போற்றுபவருமல்ல. அவரைப்போன்ற முதிர்ந்த நோக்கினரே, ''களையவேண்டியது'' என்று கூறிய ஒரு குறைபாட்டினை, இன்று நாம் களையாவிடின், எதிர்காலத்தில் அது இயலாததாகிவிடும். சான்றாக, இந்தியத் துணைக்கண்டம், எளிதில் மெட்ரிக் முறைகளை ஏற்றுக்கொண்டுவிட்டது. ஆனால் அமெரிக்கர்களால் அது இயலவில்லை. காரணம் அங்கு மிகப்பரந்த அளவில் பழைய அளவுமுறை பழக்கத்தில் இருக்கிறது. முழுவதும் மாற்றி அமைக்க மிகுந்த செலவு ஆகும். நாம் தொழில்துறையில் துவக்க கட்டத்தில் இருப்பதால், புதிய அளவு முறையை ஏற்பது எளிதாக இருந்தது. அதுபோலவே கல்வி வளர்ச்சியும் நூல்கள் பதிப்பீடும் குறைவாக இருக்கின்ற நிலையிலேயே மாற்றங்கள் செய்வது, வளர்ந்தபின் செய்வதைவிட

எளிதாகும். அம்மாற்றம் வளர்ச்சிக்கும் துணை செய்யும். எனவே, 'தேவை' என்பதை ஒப்புக்கொள்வோமானால், அதைச் 'செய்து முடிப்பது' தான் செயல்திறன் மிக்க ஒரு இனத்தின் தத்துவமாக இருக்கவேண்டுமே தவிர, ஒத்திப்போடுவதும், ஒதுங்கி நிற்பதும் பாராட்டுக்குரிய பாதை ஆகாது. இருக்கின்ற வரிவடிவத்தை எந்த அளவிற்கு மாற்றமில்லாது வைத்துக்கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு வைத்துக்கொண்டு அதே சமயத்தில் முழுமையான ஒருமையையும் சீர்மையையும் தமிழ் வரிவடிவத்திற்குச் சேர்ப்பதற்கான வழிவகைகளை ஆய்வோம்.

6.3.1. உயிர் எழுத்துக்கள்

1. அடிப்படை உயிர் வடிவம் ....அ

அகரத்தை அடிப்படையாக வைத்து மற்ற உயிர் ஒலிகளை அகரத்திற்கு, குறிகளைச் சேர்ப்பதன்மூலம் உருவாக்கலாம். இக்குறிகளை உயிர்க்குறிகள் என அழைக்கலாம்.

2. உயிர்க்குறிகள்

ஆகாரம்	...	ா		(ஆ = அா)
இகரம், ஈகாரம்	...	I, İ	(இ = அI	ஈ = அİ)
உகரம், ஊகாரம்	....	¬, ¬̇	(உ = அ¬	ஊ = அ¬̇)
எகரம், ஏகாரம்	...	ᑭ, ᑭ̇	(எ = அᑭ	ஏ = அᑭ̇)
ஒகரம், ஓகாரம்	....	o, ȯ	(ஒ = அo	ஓ = அȯ)

3. மெய்க்குறி .... ° (க் = க°)

4. ஆய்தம் .... ஃ

5. அடிப்படை உயிர்மெய் எழுத்துக்கள்

க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன.

மேலே குறிப்பிட்ட மாற்றங்களுடன் தமிழ் வரிவடிவம் பின்கண்டவாறு அமையும்

உயிர் எழுத்துக்களும் ஆய்தமும்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ	ஐ	ஔ	ஃ
அ	அா	அI	அİ	அ¬	அ¬̇	அᑭ	அᑭ̇	அo	அȯ	அய°	அவ°	ஃ

மெய், உயிர் மெய் எழுத்துக்கள் :

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கொ	கோ	கை	கௌ	க்
க	கா	கI	கİ	க ͞	க ̇͞	க ᒣ	க ᒣ̇	கO	கȮ	கய°	கவ°	க°
.												
.												
.												
ன	னா	னI	னİ	ன ͞	ன ̇͞	ன ᒣ	ன ᒣ̇	னO	னȮ	னய°	னவ°	ன°

மேற்கண்ட முறையைப் பின்பற்றினுல் தமிழ் வரிவடிவம் 30 குறியீடுகளைக் கொண்டதாக இருக்கும். விபரம் பின்வருமாறு :

அடிப்படை உயிரெழுத்து	...	1
உயிர்க்குறிகள்	....	9
அடிப்படை உயிர்மெய் எழுத்துக்கள்	....	18
ஆய்த எழுத்து	...	1
மெய்க்குறி	....	1
மொத்தம்	...	30

மேற்கண்ட முறைப்படி அமைந்த தமிழ் நெடுங்கணக்கு படம் 4-இல் தரப்பட்டிருக்கிறது.

இச்சீரமைப்பின்படி மனப்பாடம் செய்யவேண்டிய குறியீடுகள் 30. அவை பின்வருமாறு :

அ, ஃ

க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன

ா, I, İ, ͞, ̇͞, ᒣ, ᒣ̇, O, Ȯ, °

7. இம்முறையின் குறிப்பிடத்தக்க கூறுபாடுகள் :

- உயிரெழுத்துக்கள் யாவும் அகரத்தை அடிப்படையாக வைத்து எழுதபட்டுள்ளன. தேவநாகரி வரிவடிவத்தில் 12

உயிர் எழுத்துக்களில் 8 எழுத்துக்கள் அகரத்தை அடிப்படை-யாக வைத்து, அதற்கு, மேலும் சில குறிகளைச் சேர்ப்பதன் மூலமாகவே அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது பல இந்திய மொழிகட்கும் பொதுவான வழக்கமாகும். தமிழிலும் அ, ஆ, இ மூன்றும் அகரத்தை அடிப்படையாக வைத்தே எழுதப்படுகின்றன.

- 'அகரத்தை அடிப்படையாக வைத்து மற்ற உயிர் எழுத்துக்களை அமைக்கும் முறையும், உயிர்மெய் அகரத்தை (க, ங, ... ன) அடிப்படையாக வைத்து மற்ற உயிர் மெய் எழுத்துக்களை அமைக்கும் முறையும் பொதுவாக்கப்-பட்டுள்ளன. ஒரே முறை விதிவிலக்கின்றிப் பயன்படுத்தப்-படுவதால் சீர்மையும், பொதுமையும் முழுமையாக இடம் பெற்றிருக்கின்றன. கற்பது மிக எளிதாக்கப்படுகிறது'.
- தமிழ் எழுத்துக்கட்கு, நான்கு மாடிக்கான இடம் வேண்டும். அது பின்வருமாறு :

இரண்டு மாடிகள் (குறைந்த அளவு) 

மூன்று மாடிகள் (மேல்மாடி) 

மூன்று மாடிகள் (கீழ்மாடி) 

இந்தச் சீரமைப்பின் மூலம் வரிவடிவத்திற்கு இருமாடிகள் போதுமானவை. எனவே ஒரு பக்கத்தில் அதிக வரிகள் இடம் பெறும் என்பதுமட்டுமின்றி, வரிவடிவம் பார்ப்பதற்கு அழகாகத் தோன்றும்.

- ஒரே குறியீட்டினுல் எழுதப்பட்ட மெய் எழுத்துக்கள், உயிர் மெய் இகரம், உயிர்மெய் ஈகாரம், உயிர்மெய் உகரம், உயிர் மெய் ஊகாரம், ஆகியன இரண்டு குறியீடுகளைக் கொண்டு எழுதப்படுவதால், பக்கவாட்டில் அதிக இடம் தேவைப்படும் என்றுலும், உயிர்மெய் ஒகரம், உயிர்மெய் ஓகாரம் இரண்டிலும், மூன்று குறியீடுகட்குப் பதிலாக இரண்டு அமைவதாலும், ஒவ்வொரு பக்கத்திலும் வரிகள் அதிகரிப்ப-

தாலும் முடிவில் இடத்தேவை, புதுவரிவடிவத்திற்கு பெரும் குறையாக அமையாது. வரிவடிவத்தின் ஒழுங்கும், அழகும் நிறைவாக மலரும்.

- உயிர்மெய் என்பது மெய்யும் உயிரும் சேர்ந்து உருவானது என்பது வரிவடிவத்தில் வெளிப்படையாகவும், ஒரே ஒழுங்குடனும் பெறப்படுகிறது. உயிர்மெய் எழுத்து அமைப்பு ஒரே முறையைப் பின்பற்றி நிற்கிறது. இன்றைய உயிர் மெய் எழுத்து அமைப்பில் எந்தவிதியும் கடைப்பிடிக்கப்படவில்லை. எழுத்துக்களை அப்படியே மனப்பாடம் செய்ய வேண்டும் என்பதைத் தவிர வேறு இலக்கணம் கூற இயலாத நிலை இருக்கிறது. இது முழுமையாகத் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

- உயிர் எழுத்து அமைப்பிலும், உயிர் மெய் எழுத்து அமைப்பிலும் ஒரு ஒற்றுமை உண்டாக்கப்பட்டிருக்கிறது. சான்றாக :

ஆ	=	அ + ா = அா
இ	=	அ + I = அI
க	=	க் + அ = க
கா	=	க் + ஆ = க் + அ + ா = க + ா = கா
கி	=	க் + இ = க் + அ + I = க + I = கI

- தட்டச்சுப்பொறி மிகவும் அளவுடன் அமையும். தட்டச்சுச் செய்யும் வேகமும் வெகுவாக அதிகரிக்கும். இவையனைத்தையும்விட, தட்டச்சுச் செய்த படிகள் அழகாக அமையும். இன்று தமிழில் பிழையில்லாது தட்டச்சுச் செய்யப்பட்ட ஒரு பக்கத்தைக் காண்பது அரிது.

- தமிழ், ஆங்கிலம் இரண்டிற்கும் தேவையான வரிவடிவத்தை ஒரே தட்டச்சில் அமைத்துக்கொள்வது கூட சாத்தியமான ஒன்றாகும்.

- தமிழ் அச்சு எளிமை அடையும்; அச்சுப் பெட்டியில் குழிகள் குறையும்

- வரியச்சு (Lino-type), தனியச்சு (Mono-type), மேலும் தந்திபோன்ற சாதனங்களைத் தமிழில் பயன்படுத்துவதில் பல சாதகமான சூழ்நிலைகள் உருவாகும்.

8. அணுகுமுறை

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தின் இரண்டாவது கட்டமாக இரு கருத்துக்கள் இக்கருத்துரையில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விரு கருத்துக்களினிடையில் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ற அளவில், மிகுந்த மாறுதல் எதுவும் இல்லே. இரண்டாவது முறையில் இரண்டு அல்லது நான்கு எழுத்துக்கள் குறைகின்றன. இரண்டு முறைகளுமே வரிவடிவத்தை 131-இலிருந்து வெகுவாகக் குறைத்துவிடுகின்றன. இரண்டாவது முறையில், சீர்மை (Uniformity) பொதுமை (Generality) ஆகியன மிகுந்து நிற்கின்றன.

இவை இரண்டு பற்றியும் சிந்திப்பவர்கள், அணுகுமுறையை மட்டுமே ஆராய வேண்டுகிறேன். குறியீடுகளேப் பொறுத்தவரை இவைதான் முடிந்த முடிவு என்பதில்லே. முதல் சீரமைப்பு முறையில் 5 குறியீடுகளும், இரண்டாவது சீரமைப்பில் 9 குறியீடுகளும் புதிதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவையென்று பட்டால் இவற்றின் வடிவத்தை மாற்றலாம்; திருத்தலாம். இந்த அணுகுமுறையின் குறை, நிறை பற்றிச் சிந்திப்பது மட்டுமே முக்கிய மானதாகும்.

9. எழுத்துச் சீரமைப்பு ஒரு மகத்தான சாதனே

இந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கும் குறியீடுகள்தான் 'முடிவானவை' என்பதில்லே. இந்த 'அணுகுமுறைதான்' கடைசியானது என்பதுமில்லே. ஏதாவது ஒரு முறையான பாதையை வகுத்து, ஏறத்தாழ முப்பது குறியீடுகட்குள் நமது வரிவடிவத்தைச் சுருக்க வேண்டும். சுருக்க முடியும். அதற்கு நாம் குறிப்பிட்டதைவிடச் சிறந்த பாதைகள் இருக்கலாம். இருப்பின் ஏற்கலாம்.

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், இச்சீரமைப்பு ஒரு சாதாரண மாற்றம் போலவும், சிறு, சிறு சிக்கனங்கட்குத் துணேபுரியக் கூடிய வசதி போலவும் தோன்றக் கூடும். செயல்படுத்தப்படுமானல், ''எழுத்துச் சீரமைப்பு'' ஒரு மகத்தான மாற்றமாக உருப்பெறும். ஒரு வரலாற்றுச் சாதனேயாக வளரும்.

பொதுவாக மனித சமுதாயத்தில், பெரிய புரட்சியை ஏற்படுத்திய பல மாற்றங்கள் மிகச் சாதாரணமானவை. வேட்டையாடி வாழ்ந்த மனிதனே வீடும், தோட்டமும் கொண்ட வேளாண்மை நாகரீகத்திற்கும், அதன் அடிப்படையில் அமைந்த உன்னதமான

வரலாற்றுக்கும் வழிவகுத்தது மிகச் சாதாரணமான கண்டுபிடிப்பான 'கலப்பை' தான். ஒரு சிறு நீராவி இயந்திரம்தான் தொழில் நாகரீகத்தைத் தோற்றுவித்தது ஒரு சிறு விதையிலிருந்து ஆலமரம் வளர்வது போல, இந்தச் சிறு கண்டுபிடிப்புகள், அப்பொழுது கற்பனையிலும் கருதாத விளைவுகளைப் பின்னர் உருவாக்கின. கடந்த 25 ஆண்டுகளாக அறிவுத் துறையில் நாம் காணும் விந்தைகள் பல வற்றையும் உருவாக்கத் துணை நின்ற, துணை நிற்கும், கருவி, சுழி (0) ஒன்று (1) என்ற இரணடு இலக்கங்களின் அடிப்படையில் இயங்கும் கணிப்பொறி (Computer) என்னும் சாதனமாகும்.

அறிவியல் துறையில் நியூட்டன், ஐன்ஸ்ட்டின் ஆகிய இருவருக்கும் மிஞ்சிய மேதைகளை இன்னும் உலகு காணவில்லை. இவர்களது தத்துவங்களின் அடிப்படை மிக எளிய வடிவில் குறிப்பிடக் கூடியவை தான். நியூட்டனின் விதிகளின் அடிப்படை, $F = ma$ என்பதும், ஐன்ஸ்ட்டனின் தத்துவத்தின் அடிப்படை $E = MC^2$ என்பதுமாகும். இவை இரண்டையும் ஒரு நூலாகவும் விளக்கலாம். நூல் தொகுப்பாகவும் மேலும் விரிக்கலாம். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்திருப்பது கணிதம். அறிஞர்கள் இன்று கணிதத்தை அறிவியற் கலைகளின் அரசி (Queen of Sciences) என்று அழைக்கின்றனர் கணித வளர்ச்சியின் முக்கியமான கட்டம் சுழி (பூஜ்யம்) என்ற கண்டுபிடிப்பு. இது கணித உலகிற்கு 'இந்திய மேதை' தந்த நன்கொடை. அரபிய நாடுகள் வழியாக இது மேலை நாட்டை அடைந்தது. இன்று உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் இலக்கங்கள் (International numerals) அரபிய இலக்கங்கள் என்று கூறப்பட்டாலும் அவை இந்தியாவில் பிறந்தவை. மிகச் சாதாரணமாகத் தோன்றும் சுழி (பூஜ்யம்), கணித வரலாற்றில் ஒரு மாபெரும் வளர்ச்சிக்கு வித்திட்டது. ''உருவு கண்டெள்ளாமை வேண்டும்'' என்ற வள்ளுவர் வாக்கு, வாழ்வின் எல்லாத் துறைகட்கும், எல்லாக் கட்டத்துக்கும் பொருந்தும்.

இன்று தொழில்வளம் பெற்று, பொருளாதார வசதியுடன் விளங்கும் நாடுகள் அனைத்தும் கல்வியிற் சிறந்தவை. தற்குறிகள் மிகுந்த நாடு எதுவும், செல்வம் கொழிக்கும் சீமையாக மாறவில்லை. இன்று கிட்டதட்ட நூற்றுக்கு நூறு பேர் எழுதப்படிக்கத் தெரிந்த இந்த நாடுகளின் மொழிகள், மொழியியல், அறிவியல் தொடர்பு கொண்ட அணுகு முறையால் பயன்பெற்றவை. ஜப்பான் மட்டும் எழுத்துக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை ஒரு விதிவிலக்கு. ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்தும் மற்ற பல ஐரோப்பிய மொழிகட்கும், ஆங்கிலத்திற்கும் 26 எழுத்துக்கள். ஜெர்மன்

மொழிக்கு 29 எழுத்துக்கள். இரஷிய மொழிக்கு 33 எழுத்துக்கள். இன்று உலகில் பெரும்பான்மை மக்களால் பேசப்படும் முதல் 13 மொழிகளில், 8 மொழிகள் முப்பதுக்குப் பக்கமான வரிவடிவங்கள் மட்டுமேயுடையவை. தொல்காப்பியர் கூற்றுப்படி தமிழ் எழுத்துக்களும் முப்பதே.

''எழுத்தெனப்படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே''

என்பது தொல்காப்பியத்தின் தலைச்சூத்திரம்.

உயிரையும் மெய்யையும் பயன்படுத்தி, உயிர்மெய் எழுத்துக்களை அமைப்பதில் நாம் தேவையில்லாத சிக்கல்களை உருவாக்கிக் கொண்டோம். அதில் நாம் இதுவரை உழன்றது போதும். தொடர்ந்து உழல்வதற்கு எந்தவிதமான காரணமுமில்லை.

இன்றைய தமிழகம் இந்த மாற்றத்தை ஏற்குமானால், ஒரு பத்தாண்டுகட்குள் தமிழகத்தின் கல்வி நிலையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படும். தமிழ் மொழியின் முன்னேற்றப்பயணவேகம் சக்கரத்தின் துணையால் தரையில் நகரும் ஊர்தி போல் இருந்த நிலையிலிருந்து மாறி, இறக்கை பெற்ற வான ஊர்தி என வளரும். ''எழுத்துச் சீரமைப்பு'' அளவில் ஆலின் விதை போன்றது. பயனில், வேரும், விழுதுமாகப் பரவும் ''**வளர்ச்சி இயற்கையைத்**'' தன்னுள் கொண்டது.

10. முடிவுரை

தமிழகத்து மொழி அறிஞர்களும், தலைவர்களும், நமது மொழி வளர்ச்சிப் பிரச்னையை, இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் உலகின் வளர்ச்சி வேகத்தின் தேவைகளின் அடிப்படையில் நோக்கவேண்டும்.

- இவ்வளவு நாளாக இருந்த ஒன்றை ஏன் மாற்றவேண்டும்?
- இப்படிப்பட்ட மாற்றங்களைக் கூற இவன் யார்?
  இவனுக்கு என்ன தகுதி? இவனுக்கு என்ன உரிமை?

என்பன போன்ற கேள்விகள் எழலாம். முதற்கேள்வி, மாற்றத்தை எதிர்ப்பவர்களால், காலந்தோறும் கேட்கப்பட்ட கேள்வி; காலம்

பெரும்பாலும் நிராகரித்துவிட்ட கேள்வி. இரண்டாவது கேள்வி, தமிழகத்தில், பல துறைகளிலும் எளிதாகக் கேட்கப்படும் ஒன்று. வளரும் சமுதாயத்தில் கருத்துக்கள் மட்டுமே வாதிக்கப்பட வேண்டும். அவற்றின் நிறை, குறைகள் எடைபோடப்படவேண்டும். குணம் நாடிக், குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி, மிக்க கொளப்பட வேண்டும். கூறுபவர்களைப் பற்றிய ஆராய்ச்சி, உரிமை பற்றிய வாதம் கருத்துலகில் தேவையற்றது.

ஒவ்வொரு தமிழனும் தமிழ் கற்கவேண்டும்: தமிழர்களல்லாத வரும் தமிழ் கற்கும் வாய்ப்புகள் பெருக்கப்படவேண்டும். கற்கும் பாடு எளிதாக்கப்படவேண்டும். இக்குறிக்கோளுக்கு ஏற்றன-அதனால் வேறு தீங்குகள் இல்லாதிருந்தால் - ஏற்கப்படவேண்டும். எல்லாக் காலத்திற்கும், என்ன விலை கொடுத்தும் இருப்பதைக் கட்டிக் காக்க வேண்டுமென்பது ஒரு கொள்கையாக முடியாது. காக்கப்பட வேண்டியவை மட்டுமே காக்கப்படவேண்டும். கழிக்கப்படவேண்டியன கழிக்கப்படவேண்டும். மாற்றப்படவேண்டியன மாற்றப்படவேண்டும்.

தமிழில் தொல்காப்பியர் காலத்திலிருந்து 'ஒலிகள்' நிலை பெற்று நிற்கின்றன. ஆனால் வரிவடிவம், காலத்துக்காலம், தொடர்ந்து மாறி வந்திருக்கிறது. அதில் இன்றைய தேவைக்கேற்ப இன்னொரு மாற்றம் செய்வதால் எந்தத் தீங்கும் நேர்ந்துவிடாது; எண்ணிறந்த நன்மைகள் விளையும்.

இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் புதுவரிவடிவத்தில் இடம் பெறவேண்டுமே என்ற கேள்வி எழலாம். நூல்கள் ஏட்டு வடிவத்தில் இருந்த காலத்தில்கூட, வரிவடிவத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் அவை மறைந்து படவில்லை. இன்றைய சூழ்நிலையில் பழைய நூல்கள் அனைத்தும் ஒரு சில ஆண்டுகளில் புது வரிவடிவத்தில் இடம் பெற்று விடும். இன்றுவரை தமிழில் வந்திருக்கும் நூல்களின் எண்ணிக்கை அப்படியொன்றும் மலைக்கத்தக்கதல்ல. தொல்காப்பியத்திலிருந்து, நேற்றுவரை வெளிவந்துள்ள தமிழ் நூல்கள் அனைத்தும் சேர்ந்தால் கூட, இன்று ஜெர்மனி, அல்லது ஜப்பான் போன்ற ஒரு சிறு நாடு ஓராண்டில் வெளியிடும் நூல்களின் எண்ணிக்கைக்கு ஈடாகாது. எனவே, பழைய நூல்கள் புது வரிவடிவத்தில் வெளியிடப்படவேண்டு-வதை ஒரு தடைக்கல்லாக்க வேண்டுவதில்லை.

இரண்டாவதாக, தமிழ் வழங்கும் மற்றநாடுகளிலும் இந்த வரி வடிவமாற்றம் ஏற்கப்படவேண்டும். இல்லாவிட்டால் மொழித்தொடர்பு குறையும், குன்றும், என்ற ஐயம் எழுகிறது. இது எண்ணப்பட வேண்டிய ஒன்று. முடிந்தவரை இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் தொடர்புகொண்டு ஒரு பொதுக்குழு அமைத்து அதன் மூலம் இம்மாற்றத்தைச் செய்வது பொருத்தமுடையதாகும்.

மனித சமுதாய வளர்ச்சியின் ஒரு முக்கியமான, மிக உன்னதமான, கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இன்றைய, அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கும், நமது பழைய அனுபவங்கட்கும் ஒரு தொடர்பும் இல்லை. புது உலகம், புது உலகம் என்று நாம் சாதாரணமாக அடிக்கடி கூறி வந்திருக்கிறோம். முன்பு இந்தச் சொல் பெரும்பாலும் சம்பிரதாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. இன்று உண்மையிலேயே, ஒரு புது உலகம் உருவாகி வருகிறது. அதன் விளைவுகள் இன்றே நாம் மலைப்புறும் அளவில் இருககின்றன. எதிர்காலத்தில் இன்னும் நாம் வியந்து பிரமிக்கும் அளவில் இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் நிறையத் தென்படுகின்றன. இந்தக்கால வெள்ளத்தை அறியாது, படகின்றி, கப்பலின்றி, ஆற்றுப் படுகையில் உல்லாசமாக நடந்து கொண்டிருப்பவர்கள் அடித்துச் செல்லப்பட்டு விடுவார்கள். இதுதவிர்க்க முடியாதது. ''நாம் எத்தனையோ எதிர்ப்புகளைச் சமாளித்தோம்; படையெடுப்புகளைப் பார்த்தோம். நாம் இதுவரை காணாத கண்டங்களா''? என்பது போன்ற வசனங்களும், அணுகு முறைகளும் இன்று பொருந்தா. இன்று ஒரு மொழியையோ, இனத்தையோ, எதிர்நோக்கி இருக்கும் பிரச்னைகள் தன்மையில், பரிமாணத்தில் முற்றிலும் வேறானவை. பழைய அனுபவங்களோடு செய்யும் ஒப்பீடுகள் பயனற்றவை.

மனித சமுதாயம் தோன்றிய நாட்களிலிருந்து, மாற்றங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. அவை, பழமையோடு பின்னி, இணைந்த மாற்றம் மிக மெதுவான மாற்றம். ஒரு தலைமுறை தன் காலத்தில் ஏற்படும் மாற்றத்தை அவ்வளவாக உணராத அளவில் மெதுவாக நிகழ்ந்தவை. இன்றைய மாறுதல்கள் அப்படிப்பட்டவையல்ல. அவை மகத்தானவை. பன்மடங்கு விரைவானவை.

மனித சமுதாய வளர்ச்சியில், இருபடிகள் குறிப்பிடத் தக்கவை. ஒன்று வேளாண்மை நாகரிகம் (Agricultural Civilisation). இரண்டாவதுதொழில் நாகரிகம் (Industrial Civilisation). இரண்டாவது உலகப்-

போருக்குப் பின்னர், மானிட வளர்ச்சியில் கிட்டத்தட்ட ஒரு புதிய கட்டம் அதாவது, மூன்ருவது நாகரிகம் உருவாகி, வளர்ந்து வரு-வதாக அறிஞர்களால் கருதப்படுகிறது. இதை ''அறிவு யுகம்'' (Knowledge Era) என்றும், ''தொழில் நுட்ப யுகம்'' என்றும் பல-வாறு அழைக்கிருர்கள். பெயர் எதுவாயினும், தனது வளர்ச்சிப் பாதையில், தனது முடிவிலாத முன்னேற்றப் பயணத்தில், மானிடம் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்கது வளர்ச்சி வேகம். அதற்குத் துணை நிற்பது கல்வி. இதைக் ''கல்வி யுகம்'' என்பதும் பொருந்தும். இப்பொழுது ஏற்படும் மாற்றங்-களின் வேகம் மனித சமுதாயம் அறிந்திராத ஒன்று. நமது முன்-னோர்கள் எண்ணியும் பார்த்திராத ஒன்று. இந்த மாற்றங்களினுல் ஏற்படும் விளைவுகள் மகத்தானவை. எதிர்பார்க்க இயலாத பரி-மாணங்களுடையவை. சில துறைகளில் ஏற்பட்ட அண்மைக்கால வளர்ச்சி வேகத்தைப் படம் 5, படம் - 6 இவற்றில் காணலாம். படம் 5, பயண வேகத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது. பாடம் 6, வேட்டுப் பொருள்களில் வெளியாகும் 'சக்தியின்' வளர்ச்சியைக் காட்டுகிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பிந்திய வளர்ச்சி வேகம், அதற்கு முந்திய வளர்ச்சி வேகத்தோடு தொடர்பில்லாத அளவுக்கு விரைவு பெற்றிருப்பதைப் படங்களில் தெளிவாகக் காண லாம்.

''தொன்றுமுதல் வருகின்ற தொடர்புக்குத் துதிபாடச்
சுருதிநான் கூட்ட வில்லை;
தொடர்பற்ற புதுஉலகம் தூரத்தில் மலர்கின்ற
தோற்றத்தைப் பாடுகின்றேன்''

என்ற கவிதைக்கு வரிவடிவம் அமைத்தது போன்று விளங்குவன அப்படங்கள். அந்தப்புதுஉலகம் அறிவியல், தொழிலியல் அடிப்-படையில் அமைந்த கல்வியின் கருவில் உருவாகி மலரும் ஒன்று. அதற்கு நாம் யாரும் பள்ளி எழுச்சி பாடவேண்டுவதில்லை. நாம் மறுத்தாலும் மலரும்; தடுத்தாலும் மலரும். அதற்கு நம்மைப் பல வழிகளிலும் சமைவாக்கிக் கொள்வதுதான் முன்னேக்குள்ள அணுகு-முறை. இரண்டாவது உலகப்போரின் முடிவு ஒருயுகத்தின் முடிவு-காலம். ஒரு புதிய யுகத்தின் தொடக்ககாலம். நாமும் இந்த யுகத்தில் இடம்பெற்று, ஏற்றம் பெற்று வாழவேண்டும். வளர வேண்டும். அதற்கான திட்டங்களை முறையாக வகுக்க வேண்டும். தேவையான முயற்சிகளை முன்னேக்கோடும், துணிவோடும், தியாக உணர்வோடும், எழுச்சியோடும் செய்யவேண்டும்.

ஒரு இனத்தின் வளர்ச்சி, மொழியின் வளர்ச்சி, அந்த மக்களின் ஆசையின் அளவைப் பொறுத்தது. அவர்கள் தம் கனவுகளைப் பொறுத்தது. கனவுகளின் பரிமாணங்களைப் பொறுத்தது. இன்று நமது வறுமை, பொருளாதாரத்தில்தான் என்பதில்லை. நாம் நம் எண்ணங்களில் வறியவர்களாக இருக்கிறோம். நமது ஆசைகளில் கூட வறியவர்களாக இருக்கிறோம். நமது கனவுகள் கூடப்பெரிய-வைகளாக இல்லை. இந்த நிலை மாறவேண்டும். இதை மாற்றும் பார்வைப் பரப்பும், சிந்தனைத் தெளிவும், உள்ள உரமும், உண்மைப் பற்றும், உள்ளவர்களை ஒதுக்காது, ஒதுங்கி நிற்கவிடாது, இப்-பணியில் ஈடுபடுத்தவேண்டும். எல்லாவிதமான வேறுபாடுகளையும் கடந்து, பகைமை ஊற்றுகளைத் தூர்த்து, மொழிவளர்ச்சிப் பணி-யில் ஒருமைப்பாடு காணவேண்டும். இது நம்மை எதிர்நோக்கும் தலையாய பணி. இன்றைய அவசரத் தேவை.

11. சீரமைத்த வரிவடிவம்

11. 1. மாதிரிக்கு ஒரு பக்கம்

பொதுவாக, சீரமைத்த வரிவடிவம் அச்சிலும், கைஎழுத்திலும் எப்படித் தோன்றும் என்ற கேள்வி மனதிற்குள் எழுவது இயல்பு. மாதிரிக்காக, இன்றைய வரிவடிவத்தையும், சீரமைத்த வரிவடிவத்-தையும் அச்சிட்ட சிறுபகுதி அடுத்த பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்-கிறது. இவற்றை ஒப்பிடுவதில் இரு முக்கியமான கூறுபாடுகளை மனதிற் கொள்வது தேவையாகிறது.

- சீரமைத்த வரிவடிவத்திற்குச் சில புதிய குறியீடுகள் தேவைப்படுகின்றன. அவை அச்சகத்தில் இல்லை. இச் சிறு வெளியீட்டிற்காக அவை புதிதாகச் செய்யப்படவும் இல்லை. இருக்கின்ற குறியீடுகளையே இயன்றவரை சரி செய்து பயன்படுத்தியிருக்கின்றனர் பதிப்பகத்தார். இக் குறியீடுகள், புதிதாகச் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்-பட்டால், சீரமைத்த வரிவடிவத்தின் தோற்றம், ''**மாதிரி**''-யில் தோன்றுவதினும் சிறப்பாக இருக்கும் என்று எதிர்-பார்க்கலாம். இடமும் சற்றுக் குறைவாகவே தேவைப்படும்.

- தமிழில் மெய்யெழுத்து அடிக்கடி இடம்பெறும் ஒன்று. சீரமைத்த வரிவடிவத்தில் மெய்யெழுத்துக்குப் பயன்-படுத்தவேண்டிய ''*சிறு சுழி*'' இன்மையால், அதற்குப் பதிலாக, முற்றுப்புள்ளிக் குறியீடு பயன்படுத்தப்பட்-டிருக்கிறது.

11. 2. குறைந்த பட்சத் திருத்தம்

தற்போதைய வரிவடிவம்	குறைந்தபட்சச் சீரமைப்பு
மனித சமுதாய வளர்ச்சியின் ஒரு முக்கியமான, மிக உன்னத மான, கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இன்றைய, அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கும், நமது பழைய அனுபவங்கட்கும் ஒரு தொடர்பும் இல்லை. புது உலகம், புது உலகம் என்று நாம் சாதாரண மாக அடிக்கடி கூறி வந்திருக்கி றோம். முன்பு இந்தச் சொல் பெரும்பாலும் சம்பிராயத்திற்குப் பயன் படுத்தப்பட்டது. இன்று உண்மையிலேயே, ஒரு புது உல கம் உருவாகி வருகிறது. அதன் விளைவுகள் இன்றே நாம் மலைப் புறும் அளவில் இருக்கின்றன. எதிர்காலத்தில் இன்னும் நாம் வியந்து பிரமிக்கும் அளவில் இருக் கும் என்பதற்கான அறிகுறிகள் நிறையத் தென்படுகின்றன. இந் தக்கால வெள்ளத்தை அறியாது, படகின்றி, கப்பலின்றி, ஆற்றுப் படுகையில் உல்லாசமாக நடந்து கொண்டிருப்பவர்கள் அடித்துச் செல்லப்பட்டு விடுவார்கள். இது தவிர்க்க முடியாதது.	மனıத சமᄀதாய வளர·ச·சı யıன· ஒரᄀ மᄀக·கıயமான, மıக உன·னதமான, கட·டத·தıல· இன·றᄀ நாம· இரᄀக·கıறோம·. இன·றைய அறıவᄀ வளர·ச·சı யıன· வேகத·தıற·கᄀம·, நமதᄀ பழைய அனᄀபவங·கட·கᄀம· ஒரᄀ தொடர·பᄀம· இல·லை· பᄀதᄀ உலகம·, பᄀதᄀ உலகம· என·றᄀ நாம· சாதாரணமாக அடıக·கடı கᄀறı வந·தıரᄀக· கıறோம·. மᄀன·பு இந·தச· சொல· பெரᄀம·பாலᄀம· சம· பıரதாயத·தıற·கᄀப· பயன·படᄀ த·தப·பட·டதᄀ. இன·றᄀ உண· மையıலேயே, ஒரᄀ பᄀதᄀ உலகம· உரᄀவாகı வரᄀகıறதᄀ. அதன· வıளைவᄀகள· இன·றே நாம· மலைப·புறᄀம· அளவıல· இரᄀக· கıன·றன. எதıர·காலத·தıல· இன·னᄀம· நாம· வıயந·தᄀ பıர மıக·கᄀம· அளவıல இரᄀக·கᄀம· என·பதற·கான அறıகᄀறıகள· நıறையத· தென·படᄀகıன·றன. இந·தக· காலவெள·ளத·தை அறı யாதᄀ, படகıன·றı, கப·பலıன·றı ஆற·றᄀப· படᄀகையıல·உல·லா சமாக நடந·தᄀ கொண·டıரᄀப· பவர·கள· அடıத·தᄀச· செல·லப· பட·டᄀ வıடᄀவார·கள·. இதᄀ தவıர·க·க மᄀடıயாததᄀ.

✶ மாதிரிப்பகுதி வரிவடிவம், அதன் தோற்றம் தோராயமாக எப்படி இருக்கும் என்பதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. வரிகட்கு இடையில் இருக்கும் இடைவெளி, தற்போதைய வரிவடிவத்திற்கும், சீரமைத்த வரிவடிவத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் பகுதிகளில் சமமாக வைக்கப்படவில்லை. எனவே, இரு வரிவடிவங்கட்கும் தேவைப்படும் இடம் பற்றிய ஒப்புநோக்கு, இங்கு பொருந்தாது.

11. 3. முழுமையான சீரமைப்பு

தற்போதைய வரிவடிவம்

மனித சமுதாய வளர்ச்சியின் ஒரு முக்கியமான, மிக உன்னத மான, கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கும், நமது பழைய அனுபவங்கட்கும் ஒரு தொடர்பும் இல்லை. புது உலகம், புது உலகம் என்று நாம் சாதாரண மாக அடிக்கடி கூறி வந்திருக்கி றோம். முன்பு இந்தச் சொல் பெரும் பாலும் சம்பிராயத்திற்குப் பயன் படுத்தப்பட்டது. இன்று உண்மையிலேயே, ஒரு புது உல கம் உருவாகி வருகிறது. அதன் விளைவுகள் இன்றே நாம் மலைப் புறும் அளவில் இருக்கின்றன. எதிர்காலத்தில் இன்னும் நாம் வியந்து பிரமிக்கும் அளவில் இருக் கும் என்பதற்கான அறிகுறிகள் நிறையத் தென்படுகின்றன. இந் தக்கால வெள்ளத்தை அறியாது, படகின்றி, கப்பலின்றி, ஆற்றுப் படுகையில் உல்லாசமாக நடந்து கொண்டிருப்பவர்கள் அடித்துச் செல்லப்பட்டு விடுவார்கள். இது தவிர்க்க முடியாதது.

முழுமையான சீரமைப்பு

மனIத சமுதாய வளர˙ச˙சI
யIன˙ அOரு முக˙கIயமான,
மIக அுன˙னதமான, கட˙டத˙
தIல˙ அIன˙று நாம˙ அIருக கI
றOம˙. அIன˙றய˙ய அறIவு
வளர˙ச˙சIயIன˙ வ ெகத˙தIற˙
கும˙ நமது பழய˙ய அனுபவங˙
கட˙கும˙ அOரு தOடர˙பும˙
அIல˙லய˙. புது அுலகம˙,
புதுஅுலகம˙ அ ெ ன˙று நாம˙
சாதாரணமாக அடIக˙கடI குறI
வந˙தIருக˙கIறOம˙. முன˙பு
அIந˙தச˙சOல˙ ப ெ ரும˙பாலும˙
சம˙பIரதாயத˙தIற˙குப˙ பயன˙
படுத˙தப˙பட˙டது. அIன˙று
அுண˙மய˙யIல ெ ய ெ, அOரு
புது அுலகம˙ அுருவாகI
வருகIறது. அதன˙ வIளய˙வு
கள˙ அIன˙ற ெ நாம˙ மலய˙ப˙
புறும˙ அளவIல˙ அIருக˙கIன˙
றன. அ ெ தIர˙காலத˙தIல˙ அIன˙
னும˙ நாம˙ வIயந˙து பIரமIக˙
கும˙ அளவIல˙ அIருக˙கும˙
அ ெ ன˙பதற˙கான அறIகுறIகள˙
நIறய˙யத˙ த ெ ன˙படுகIன˙றன.
அIந˙தக˙ கால வ ெ ள˙ளத˙தய˙
அறIயாது, படகIன˙றI, கப˙ப
லIன˙றI, ஆற˙றுப˙ படுகய˙
யIல˙ அுல˙லாசமாக நடந˙து
கOண˙டIருப˙பவர˙கள˙ அடIத˙
துச˙ ச ெ ல˙லப˙பட˙டு வIடு
வார˙கள˙. அIது தவIர˙க˙க
முடIயாதது.

✶ மாதிரிப்பகுதி வரிவடிவம், அதன் தோற்றம் தோராயமாக எப்படி இருக்கும் என்பதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. வரிகட்கு இடையில் இருக்கும் இடைவெளி, தற்போதைய வரிவடிவத்திற்கும், சீரமைத்த வரிவடிவத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் பகுதிகளில் சமமாக வைக்கப்படவில்லை. எனவே, இரு வரிவடிவங்கட்கும் தேவைப்படும் இடம் பற்றிய ஒப்புநோக்கு, இங்கு பொருந்தாது.

12. நூற்றொகை

1. வெ. சுந்தரம்: கல்சொல்லும் கதைகள்; அசோகன் பதிப்பகம், சென்னை; 1972.

2. இரா. கிருஷ்ணமூர்த்தி: தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்; விஜயா அச்சகம், திருச்சி, 1978.

3. புலவர் குழந்தை: தமிழெழுத்துச் சீர்திருத்தம்; வேலா வெளியீடு, 1968.

4. எழுத்துச்சீர்திருத்தம்; கட்டுரைத் தொகுப்பு; பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு, திருச்சி-17,1948.

5. வா. செ. குழந்தைசாமி: தமிழெழுத்துச் சீரமைப்பு; கலைக்கதிர், சனவரி, 1978.

தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் (1)





படம் 1

தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் [1]





படம் 2

தமிழ் நெடுங்கணக்கு : குறைந்தபட்சச் சீரமைப்பு

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ	ஐ	ஔ	ஃ
அ	அா	இ	இா	உ	உா	எ	எா	ஒ	ஒா	ஐ	ஔ	ஃ

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கொ	கோ	கை	கௌ	க்
க	கா	கı	கı̇	க¬	க¬̇	கெ	கே	கொ	கோ	கை	கௌ	க°
ங	ஙா	ஙı	ஙı̇	ங¬	ங¬̇	ஙெ	ஙே	ஙொ	ஙோ	ஙை	ஙௌ	ங°
ச	சா	சı	சı̇	ச¬	ச¬̇	செ	சே	சொ	சோ	சை	சௌ	ச°
ஞ	ஞா	ஞı	ஞı̇	ஞ¬	ஞ¬̇	ஞெ	ஞே	ஞொ	ஞோ	ஞை	ஞௌ	ஞ°
ட	டா	டı	டı̇	ட¬	ட¬̇	டெ	டே	டொ	டோ	டை	டௌ	ட°
ண	ணா	ணı	ணı̇	ண¬	ண¬̇	ணெ	ணே	ணொ	ணோ	ணை	ணௌ	ண°

த	தா	தI	தİ	த¬	த¬̇	தெ	தே	தொ	தோ	தை	தௌ	த°
ந	நா	நI	நİ	ந¬	ந¬̇	நெ	நே	நொ	நோ	நை	நௌ	ந°
ப	பா	பI	பİ	ப¬	ப¬̇	பெ	பே	பொ	போ	பை	பௌ	ப°
ம	மா	மI	மİ	ம¬	ம¬̇	மெ	மே	மொ	மோ	மை	மௌ	ம°
ய	யா	யI	யİ	ய¬	ய¬̇	யெ	யே	யொ	யோ	யை	யௌ	ய°
ர	ரா	ரI	ரİ	ர¬	ர¬̇	ரெ	ரே	ரொ	ரோ	ரை	ரௌ	ர°
ல	லா	லI	லİ	ல¬	ல¬̇	லெ	லே	லொ	லோ	லை	லௌ	ல°
வ	வா	வI	வİ	வ¬	வ¬̇	வெ	வே	வொ	வோ	வை	வௌ	வ°
ழ	ழா	ழI	ழİ	ழ¬	ழ¬̇	ழெ	ழே	ழொ	ழோ	ழை	ழௌ	ழ°
ள	ளா	ளI	ளİ	ள¬	ள¬̇	ளெ	ளே	ளொ	ளோ	ளை	ளௌ	ள°
ற	றா	றI	றİ	ற¬	ற¬̇	றெ	றே	றொ	றோ	றை	றௌ	ற°
ன	னா	னI	னİ	ன¬	ன¬̇	னெ	னே	னொ	னோ	னை	னௌ	ன°

படம் 3

தமிழ் நெடுங்கணக்கு : முழுமையான சீரமைப்பு

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ	ஐ	ஔ	ஃ
அ	அா	அI	அİ	அ¬	அ¬̇	அᴘ	அᴘ̇	அO	அȮ	அய°	அவ°	ஃ

க	கா	கI	கİ	க¬	க¬̇	கᴘ	கᴘ̇	கO	கȮ	கய°	கவ°	க°
ங	ஙா	ஙI	ஙİ	ங¬	ங¬̇	ஙᴘ	ஙᴘ̇	ஙO	ஙȮ	ஙய°	ஙவ°	ங°
ச	சா	சI	சİ	ச¬	ச¬̇	சᴘ	சᴘ̇	சO	சȮ	சய°	சவ°	ச°
ஞ	ஞா	ஞI	ஞİ	ஞ¬	ஞ¬̇	ஞᴘ	ஞᴘ̇	ஞO	ஞȮ	ஞய°	ஞவ°	ஞ°
ட	டா	டI	டİ	ட¬	ட¬̇	டᴘ	டᴘ̇	டO	டȮ	டய°	டவ°	ட°
ண	ணா	ணI	ணİ	ண¬	ண¬̇	ணᴘ	ணᴘ̇	ணO	ணȮ	ணய°	ணவ°	ண°
த	தா	தI	தİ	த¬	த¬̇	தᴘ	தᴘ̇	தO	தȮ	தய°	தவ°	த°

ந	நா	நI	நİ	ந¬	ந¬̇	ந ᴘ	ந ᴘ̇	நO	நȮ	நய°	நவ°	ந°
ப	பா	பI	பİ	ப¬	ப¬̇	ப ᴘ	ப ᴘ̇	பO	பȮ	பய°	பவ°	ப°
ம	மா	மI	மİ	ம¬	ம¬̇	ம ᴘ	ம ᴘ̇	மO	மȮ	மய°	மவ°	ம°
ய	யா	யI	யİ	ய¬	ய¬̇	ய ᴘ	ய ᴘ̇	யO	யȮ	யய°	யவ°	ய°
ர	ரா	ரI	ரİ	ர¬	ர¬̇	ர ᴘ	ர ᴘ̇	ரO	ரȮ	ரய°	ரவ°	ர'
ல	லா	லI	லİ	ல¬	ல¬̇	ல ᴘ	ல ᴘ̇	லO	லȮ	லய°	லவ°	ல°
வ	வா	வI	வİ	வ¬	வ¬̇	வ ᴘ	வ ᴘ̇	வO	வȮ	வய°	வவ°	வ°
ழ	ழா	ழI	ழİ	ழ¬	ழ¬̇	ழ ᴘ	ழ ᴘ̇	ழO	ழȮ	ழய°	ழவ°	ழ°
ள	ளா	ளI	ளİ	ள¬	ள¬̇	ள ᴘ	ள ᴘ̇	ளO	ளȮ	ளய°	ளவ°	ள°
ற	றா	றI	றİ	ற¬	ற¬̇	ற ᴘ	ற ᴘ̇	றO	றȮ	றய°	றவ°	ற°
ன	னா	னI	னİ:	ன¬	ன¬̇	ன ᴘ	ன ᴘ̇	னO	னȮ	னய°	னவ°	ன°

படம் 4



படம் 5 பயண வேகத்தின் வளர்ச்சி



படம் 6 வேட்டுப் பொருள்களில் வெளியாகும் சக்தியின் வளர்ச்சி